1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele { grams: "CATHOLIC PRESS, JAFFNA.
Tele { phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 9-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 35-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### யாழ்ப்பாணத் தேர்தல்மனு

பாராளுமன்றப் பொதுத்தேர்தலிலே யாழ்ப்பாணத்தொகுதிப் பிரதிநிதியாகத் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்துத் திரு. எஸ். வி. குணசிங்கம், திரு. சி. ஜே. சின்னப்பாஎனுமிருவரும் சுப்பிறீம்கோட்டுக்குச் சமர்ப்பித்தமனு செலவுதொகையுடன் தள்ளப்பட்டிருக்கிறது. இந்தமனுவிசாரணை சென்ற1953-ம்ஆண்டு ஐப்பசி மாதம் 26-ந்திகதி ஆரம்பமாகிச் சுமார் எட்டுமாதங்களாக நடைபெற்றுச் சென்றஆடி மாதம்8-ந்திகதியன்று முடிவடையலாயிற்று. எல்லாமாக 128 நாள் விசாரணை நடந்துள்ளது. விசாரணை நடந்த ஒவ்வோர்தினத்துக்கும் 500ரூபாவீதம் 64,000 ரூபாவும் ஆரம்பவிசாரணைச்செலவாக 2,000 ரூபாவுமாக மொத்தமாய் 66,000ரூபா செலவுதொகையாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இந்தமனுவை விசாரணை செய்த சங். எச். டபிள்யு. ஆர். வீரசூரியஅவர்கள் சென்றதிங்கட்கிழமை இந்தத்தீர்ப்பைக் கூறியபோது, ஆட்சேபமனுவில் எடுத்துக்காட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் எதுவுமே நிரூபிக்கப்படவில்லையெனக்கூறினர். அவர்நீதாசனத்தை விட்டுச்சென்றதும் திரு. ஜி. ஜி. அவர்கட்கு ஏராளமான மலர்மாலைகள்சூட்டப்பட்டன. அவரின் ஆதரவாளர்கள் அவரைத் தோளில்தூக்கிச்சென்று ஆர்ப்பரித்தார்கள். யாழ்ப்பாணத்திலே இதுசெய்தி வானொலி மூலம் வெளியானதும் ஆரவாரமும், மகிழ்ச்சிக்குறிகளும்காணப்படலாயின.

### மடுறேட்டுக் கொலைவழக்கு

மடுறோட்டிலே ஜே சில்வாஎன்னும் வியாபாரி சென்றவருடம புரட்டாசி மாதம் 22-ந் திகதியன்று அதேறோட்டைச்சேர்ந்த ஏ. எம். டானிஸ்சில்வா, ஏ. எம். பேபிசிங்கோ, பி. எச். பொடிஹாமி எனும் மூவரையும் துப்பாக்கியாற்சுட்டுக் கொலைசெய்தாரெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த முக்கொலைவழக்கு யாழ்ப்பாணச் சுப்பிறீங் கோட்டிலே சென்றவியாழக்கிழமை இரண்டாம்முறையாக விசாரணைசெய்யப்பட்டு, எதிரியை யூரிமார்ஏகமனதாகக் குற்றவாளியெனக் கண்டமையால் மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றார். இவரால் சுடப்பட்டு இறந்தவர்களில் டானிஸ்சில்வாவும், பேபிசிங்கோவும் சகோதரர்கள். இவர்கள்இருவரும் இவர்களுடன் சுடப்பட்டுஇறந்த பொடிகாமியின் புதல்வர்கள். முந்திய யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோட்டிலே எதிரி மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தார். இத்தண்டனையை ஆட்சேபித்து அவர் அப்பீல்செய்தார். அப்பீலில் இந்தவழக்கை மீண்டும்விசாரணை செய்யுமாறு உத்தரவாயிற்று. தற்போதுநடைபெற்ற இரண்டாவது விசாரணையிலும மரணதண்டனையே விதிக்கப்பட்டுள்ளது.

### பிரதமரின் ஊர்காவற்றுறை விஜயம்

வருகிறஐப்பசிமாதம் 1-ந்திகதி பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலஅவர்கள் ஊர்காவற்றுறைக்கு விஜயம்செய்யும்போது இருவெள்ளை இடபங்களால் இழுக்கப்படும் கூடாரமற்ற மாட்டு வண்டியொன்றில பவனிசெல்வார். அன்று காலை அவர் நயினாதீவிலுள்ள புத்தசமய, இந்துசமய கோவில்களைக் தரிசிப்பார். பின்னர்அங்குகட்டப்பட்டுள்ள புதியபிரசவசாலையையும், நெடுந்தீவிலே ஜூனியர்பாடசாலைப் புதியகட்டடங்களையும் திறந்துவைப்பார். பிற்பகற் சிறுபோசனத்தின்பின் நெடுந்தீவுக்கும, ஊர்காவற்றுறைக்குமிடையே இராஜேஸ்வரிஎன்ற புதியலோஞ்சின் பிரயாணசேவையை ஆரம்பித்துவைப்பார். பிற்பகல்ஊர்காவற்றுறைக்குத் திரும்பி வந்து வேலணையிலுள்ள அரசினர்மத்தியபாடசாலைக் குக் கூடாரமற்றமாட்டு வண்டியிற்செல்லவே, அங்கு ஓர்வரவேற்புஉபசாரம் அளிக்கப்படுவார்.

### அரசாங்க வயோதிகர்சாலை

பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவலஅவாகள் யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்யும்போது, வருகிற ஐப்பசி மாதம் 2-ந் திகதி சனிக்கிழமை காலை 9–30மணிக் கு கைதடியிலே நவமாக அமைக்கப்பட்டுள்ள அரசாங்க வயோதிகர்சாலையைத் திறந்துவைப்பார். 240 வயோதிகர்களுக்கு விடுதியளிக்கக்கூடிய இந்தவயோதிகர்சாலை எட்டு லட்சம் ரூபாசெலவிலே கட்டப்பட்டிருக்கிறது. இது வெளிச்சவசதி, குழாய்த்தண்ணீர்வசதி, வயோதிகர்களைப் பராமரிப்போருக்கும் வயோதிகர்சாலைத்தலைவருக்கும், அப்போதிக்கரிக்கும், மற்றும் கீழ்ப்பட்டவேலைகாரருக்கும் இல்லிட வசதிகள்ஆதியாம் சகலவசதிகளையும்கொண்டது. இதில் சஞ்சரிக்கும் வயோதிகர்கள் மரக்கறி ஆதியன உற்பத்திசெய்வதற்கென்று விஸ்தாரமான ஓர்காணி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் புதிய வயோதிகர்சாலைகளில் இது மூன்றாவதாகும். ஒவ்வோர் மாகாணத்துக்கும் ஒவ்வோர் அரசாங்க வயோதிகர்சாலை அருளப்படவேண்டுமென்ற சமூகசேவைப்பகுதித் திட்டப்படி இதுகட்டப்பட்டிருக்கிறது. அடுத்த வயோதிகர்சாலை மிரீகமத்திலே இம்மாதஇறுதியில் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### கவர்னர்-ஜெனறலின் நன்மாதிரிகை

காலியைச்சேர்ந்த இகல்கொடைக் கிராமத்தில் சென்ற 6-ந்திகதி நடைபெற்ற உழவுவிழாஒன்றில் கவர்னர்–ஜெனறல் சேர்ஒலிவர் குணதிலகஅவர்கள் ஓர்வெள்ளைப் பட்டுச்சாறத்தைக் கட்டிக்கொண்டு வயலில்இறங்கி இரண்டு வெள்ளைமாடுகள் பூட்டிய ஓர்கலப்பையைப் பிடித்துஉழுதார். உழவு தொடங்குமுன் அவர் பேசியவிடத்து: உணவுப்பொருட்கள் வாங்குவதற்கென்று பிறநாடுகளுக்குப் பெருந்தொகையானபணம் இலங்கையிலிருந்து போகிறதென்றும், இங்குள்ளமக்கள் உற்சாகத்துடன் கமத்தொழிலில் ஈடுபட்டால் நமதுபணம் பிறநாடுகளுக்கு வெளியேறாதென்றும்கூறி, இத்தகைய விழாக்களுக்கெல்லாம் தம்மைஅழைக்குமபடி கேட்டுக்கொண்டார்.

### கம்யூனிஸத்துக்கு இடமில்லை

வடமாட்சியிலே இரண்டாவது முறையாகத் தமிழரசுக்கட்சியினரும், கமயூனிஸ்தகட்சியினரும் சென்றசனிக்கிழமை விக்னேஸ்வரக்கல்லூரி மைதானத்தில் ஒரேமேடையில் பேசினார்கள். அவர்களில கம்யூனிஸ்த கட்சியைச் சேர்ந்த திரு. இளங்கீரன்எனபவர் பேசியபோது, ஐ. தே. கட்சி (யு. என். பி) அரசாஙகத்தை வீழ்த்துவதில் தங்களுடன் கைகோர்த்துக் கொள்ளும்படி தமிழரசுக்கட்சியைக் கேட்டுக்கொண்டார். தமிழரசுக்கட்சியைச்சேர்ந்த கே. துரைரத்தினமஅவாகள் பேசுகையில: தமிழரசுக்கட்சி கமயூனிஸ்தர்களுடன் கைகோர்த்துக் கொள்ளாதெனப் பட்டவர்த்தனமாகக் கூறினர். திரு. சி. வன்னியசிங்கம், எம். பி. அவர்கள் பேசியவிடத்து: ஓர்உண்மையான ஜனநாயகநாட்டில் கம்யூனிஸம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாதென்றுமட்டந்தட்டிவிட்டார்.

### உணவின்சுயதேவைப்பூர்த்தி

போக்குவரத்து மந்திரியான மேஜர் மொண்டேகு ஜயவிக்கிரமஅவர்கள் வெலிகாமத்தைச்சேர்ந்த கங்கொலாவிலே நாற்றுநடுகை விழாஒன்றில் பேசியபோது: நமதுநாடு உணவு விஷயமாய்த் தன்சுயதேவையைப் பூர்த்திசெய்யக் கூடியதாகும்நாளே நாம்பெற்ற அரசியற்சுதந்திரத்தின் பூரணபலனை அடைந்துகொண்ட நாளென்று நாம்பெருமையுடன் பகரக்கூடியவர்களாவோம்; நமதுநாடு குடியேற்றநாடாய் இருந்தகாலத்திலே இங்கு உணவுஉற்பத்தியைப்பெருக்கச் சொற்பமாகவே வேலைசெய்யப்பட்டது; ஏனெனில், அப்போது பர்மாவிலிருந்து ஒருகொத்துஅரிசி 9 அல்லது 10 சதத்துக்குக் கிடைக்கக்கூடியதா யிருந்தது; காலஞ்சென்ற திரு. டி. எஸ். சேனநாயகஅவர்கள் இங்கே அரிசிஉற்பத்தியைப் பெருக்குமாறு அரசாங்கத்தினிடமிருந்து பணத்தைப்பெறக் கடுமையாகப் போராடினர். இற்றைக்குச் சிலவருடங்களின்முன் இலங்கை தனது அரிசித்தேவையில் மூன்றிலொரு பங்கைமாத்திரம் உற்பத்திசெய்தது; ஆனல், இன்று அது தன்னுடைய அரிசித்தேவையில் அரைவாசியை உற்பத்திசெய்திருக்கிறது; நம்முடைய அரிசித் தேவைமுழுவதையும் உற்பத்திசெய்கிறவரையில் நாம் திருப்தியடையப்படாது; தற்போது ஏக்கர்ஒன்றுக்கு 25 புசல்நெல் விளைகின்றது; இதை ஏக்கருக்கு 40 புசலாக்கினல் நமதுமுயற்சி கைகூடியதாகுமெனக் கூறினின்றார்.

### தற்காலிக வர்த்தகமந்திரி

வர்த்தக–கடற்தொழில் மந்திரியான திரு. எஸ். சி. எஸ். கோறியா அவர்கள் இலங்கை வர்த்தகவிஷயமாய்த் தூதுக்கோஷ்டி ஒன்றுக்குத் தலைமைவகித்துச் சீனவுக்குச் சென்றிருக்கின்றார். அதனால் அவர் திரும்புகிறவரையில் அவரிடமாகப்பாதுகாப்பு–உள்நாட்டுமந்திரியாரின் பாராளுமன்ற காரியதரிசியான திரு. வல்லிபுரம் நல்லையா அவர்கள் தற்காலிக வர்த்தக – கடற்தொழில் மந்திரியாராய்க் கடமைபார்க்க நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார்.

### ஆசிரியர்கள் போதாக்குறை

தற்போது இலங்கையில் போதிய ஆசிரியர்கள் இல்லாது ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டைச் சமாளிக்குமாறு கல்விமந்திரியார் அவசர நடவடிக்கைகள்எடுக்க ஆலோசித்து வருகின்றார். அவற்றிலொன்று, சிலவருடங்களின் முன் நிறுத்தப்பட்ட ஆசிரியதராதரப் பத்திர பரீட்சையைத் திரும்பநடத்துதலும், மற்றொன்று, ஆசிரியர்பயிற்சிக்கென மாற்றியமைக்கும திட்டமொன்றை நடைமுறைக்குக் கொண்டுவருதலுமாகும் ஒருஆசிரியருக்கு 27 மாணவராக ஏற்படுத்திய "கோட்டா"வின்படி, 13,000 ஆசிரியர்கள் புதிதாகத் தேவைப்படுகின்றனரென வித்தியாதிபதி சென்றவருடம் மதிப்பிட்டிருந்தார்.

### தராதரப்பத்திரகாரரின் இயக்கம்

சிஙகள எஸ். எஸ். சி. பரீட்சையில் அரங்கேறியமாணவர்களின் அகில–இலங்கை ஐக்கியசங்கமானது தங்கள் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு பிரதமருக்குச் சமர்ப்பிக்கவிருக்கும் ஓர்மனுவுக்கென்று சிங்கள எஸ். எஸ். சி. தராதரப்பத்திரத்தைக் கொண்டுள்ள 50,000 பேரின் கையொப்பங்களைச் சேகரிக்கும் இயக்கம்ஒன்றை இலங்கைமுழுவதும் நடத்திவருகின்றது. கையொப்பங்களைச் சேகரிப்பதானது, தாங்கள்ஏற்பாடுசெய்யும் மாபெரும் இயக்கத்தின் ஓர்பகுதியேயென்று இந்தஇயக்கத்தைத் தொடக்கியவர்கள் கூறுகின்றார்கள். அதனல் எஸ். எஸ். சி. தராதரப்பத்திரம் பெற்றுள்ளவர்களிடையே இருந்துவருகின்ற வேலையில்லாப் பிரச்சினையை உடனேதானே தீர்த்துவைக்க வேண்டியதன் ஆவசியகத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர அவர்கள் எண்ணுகின்றார்கள்.

### சிங்களநாமங்கள் மாத்திரம்

பண்டாரவளைப் பட்டினத்திலுள்ள எல்லா வீதிகளுக்கும் சிங்கள நாமங்களே கொடுபடவேண்டுமென அப்பட்டினசங்கத்தின் மாதாந்தகூட்டத்தில் தீர்மானமாகியிருக்கிறது. இதுவிஷயமாய் அப்பட்டினத்திலுள்ள வீதிகளின் பெயர்ப்பலகைகளைக் கவனித்து வேண்டியமாற்றங்கள்செய்து அப்பெயர்களையெல்லாம ஆங்கிலம், சிங்களம், தமிழ் எனும் மூன்றுபாஷைகளிலும் எழுதிவைக்குமாறு பட்டினசங்க தலைவரையும், மற்றுஞ்சிலரையும் அடக்கிய கம்மிற்றிஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

### ஜேர்மனிக்குப் புத்ததூது

ஜேர்மனிக்குப் புத்தமிஷன்ஒன்றை அனுப்பிவைத்து, அங்கு புத்தசாசனத்தை அமைத்துப் புத்தசமயத்தைப் பரப்புவதற்கெனப் பத்துலட்சம்ரூபா நிதிஒன்று சேகரிக்கப்படவிருக்கிறது. இந்தநிதிக்கெனப் பாணந்துறையைச் சேர்ந்த திரு எச். நெல்சன் சொய்சா எனபவர் பதினயிரம் ரூபாஉபகரித்திருக்கின்றார். லங்காதர்மதூதுச் சங்கத்தின் ஆதரவில் சேர்க்கப்படவிருக்கும் இந்தநிதியானது கொழும்புநகரமண்டபத்திலே சென்றதிங்கட்கிழமை திரு. டட்லி சேனநாயக அவர்கள் தலைமையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தக்தூரல்

# கற்பின் சிகரம்

"உரோமைநாட்டின் சரித்திரஏடுகளைப் புரட்டிப்பார்; எதிர்த்தவர்கள் உயிர்வாழ்ந்ததில்லை; எதிர்ப்பவர்கள் எவருமேயில்லை; நான் ஆணையிட்டால் அந்தஅழகரசி உன்னைமணக்க மறுத்துவிடுவாளா? மருகரே! மன்னன் எனதுமாட்சியை அவள் அவமதித்தால் அவள்கழுத்தில் என்துவாள்வீச்சுப் பேசும்என்பதை அவள் உணராதவள் அல்ல; புறப்படு கலேர்! புதுஉலகம் நோக்கிப் புறப்படு! பொற்கொடி சூசானாளின் இல்லம்நோக்கிப் புறப்படு! விருப்பத்திற்கிசைந்தால் இன்பம்; இல்லையேல் துன்பம்என்று அந்தத் துடி இடையாளுக்கு எடுத்துச்சொல்."

"உமதுஆணைப்படியே புறப்படுகிறேன் மன்னவா."

கலேர் புறப்பட்டான். உரோமைநாட்டைஆளும் மன்னன் தியோக்கிளேசியனின் ஆணைப்படி புறப்பட்டான். மாமனிடம் மறுவார்த்தையா என்ற மனஎழுச்சியால் புறப்பட்டான். கலேருக்குக் கட்டழகி சூசானாளைக்கடிமணம்செய்துவைக்க வேண்டுமென்று கனவுகண்ட காவலனின்வார்த்தை கேட்டுப் புறப்பட்டான்.

தனிஅறையிலே தங்கப்பதுமையெனத் தனதுஆண்டவனை வழிபட்டுக் கொண்டிருந்த அந்தஅழகி சூசானாள் அவன் உள்ளேபுகுந்ததைக் கவனிக்கவில்லை.

"சூசானா!"

"யார்அது?"

"யாரா! இது என்ன கேள்வி? அன்பே! அல்லும்பகலும் உன்நினைவால் அணுவணுவாகத் துன்பப்பட்டு அடக்கமுடியாத ஆசைவெள்ளத்தால் ஓடிவந்திருக்கும் கலேரைப்பார்த்து யாரென்று கேட்கிறாயா? என்னைத் தெரியவில்லையா உனக்கு? பூசை அறையை நோக்கி ஓடிவந்திருக்கும் புதுப்பக்தன் நான்; உரோமைநாட்டு மன்னாதிமன்னனின் மாஜிமருமகன் நான்; மன்னனே கூறிவிட்டார், நீ எனக்குத்தான்என்று; மாணிக்கமே! நான்உன்னை மனதார ஏற்றுக்கொண்டேன்; செல்வமே! சரிஎன்று சொல்லு; சொர்க்கமே நமக்குச் சொந்தமாகிவிடும்."

"கலேர்! கற்றவித்தைகளை எல்லாம் கொட்டிவிட்டாய் இங்கே; அரண்மனைவாசிகளின் வார்த்தையிலே அணுவளவும் மாறுபட்டவைஅல்ல உன் வாய்வீச்சுக்கள்; உன்விருப்பத்தை நிறைவேற்ற முடியாததையிட்டு நான் வருந்துகிறேன்; திருமணமே செய்துகொள்வதில்லையென முடிவுசெய்துவிட்டநான் உன்னை மணக்கமுடியுமென்று எப்படிச் சொல்லமுடியும்? புத்தியுள்ளவராக இருந்தால் பெருந்தன்மையோடு நடந்துகொள்ளும்."

"பெருந்தன்மை! யார் யாரிடம் நடந்துகொள்ள வேண்டும்? நானா நடந்துகொள்ள வேண்டும்? சிறையிலே அடைக்கப்பட்ட நீ விடுவிக்கப்பட்டதேன்? மணப்பேசசைப் பிணமாக்கி, வந்தவனை மதம்மாற்றிய குற்றத்திற்கும் உன்னைத்தண்டிக்காமல் விட்டதேன்? உனதுஉள்ளம் மாறும் என்றகாரணத்தால் வெளியிலேவிட்டோம்; விவேகமாக நடந்துகொள்ள மறுக்கிறாய்; மனத்துணிவோடு வந்த என்னிடம் இனிப்பணிவோடு நீ நடந்துகொள்ளாவிட்டால் உனதுகன்னிமை—கற்புஎல்லாம் எனக்குச் சொந்தமாக்கிக்கொள்ளுவேன்."

"ஆண்டவனுக்குச் சொந்தமானதை அற்பன்ஒருவன் அடைய நான்என்ன அறிவற்றவளா? நெஞ்சிலே உரமில்லாத கோழையா? ஏழையாக நான் வாழலாம்; நீ அடைக்கும் சிறைஎன்னும் பேழையிலே புழுவாகத்துடிக்கலாம்; சித்திரவதைகூடச் செய்யப்படலாம்; இவைகளைக்கண்டு இந்தச் சூசானாள் அஞ்சிவிடுவாள்; ஓடிவந்து உன்காலில்விழுந்து கெஞ்சிவிடுவாள்; மிஞ்சினால் தலைபோய்விடுமென்று பிஞ்சுஉள்ளம் கொண்டவள் தனது கொள்கையைப் பின்னுக்குத் தள்ளிவிடுவாள் என்றுமட்டும் நினைத்துவிடாதே; போய்விடு; ஒருஉத்தமியை விட்டுப் போய்விடு; உன்சகோதரியை விட்டுப் போய்விடு."

"போகவா வந்தேன் என் பொன்னரசி? பொற்கொடியில் மலர்ந்த மாணிக்கத்தைத்தொடாமல் நான் திரும்புவதா?"

நெருங்கினான், நெஞ்சத்திலே நஞ்சுகொண்டவன் நெருங்கினான். அவள்உடனே ஆண்டவனைஅழைத்தாள்; அன்பேஉருவான யேசுவை அழைத்தாள். அக்கிரமக்காரனை அணுகவொட்டாமல் தடுத்துநிறுத்தக் கதறினாள். அவளின் அபயக்குரலைக் கேட்டுவிட்டார் ஆண்டவன். வீரத்தோடு, இராசஒய்யாரத்தோடு வெள்ளாட்டை வேட்டையாடவந்த வேங்கைப்புலி புறமுதுகு காட்டியோட உக்கிர கனலைவீசினார். உடனே பதறினான் கலேர். பயந்தான். படபடத்த உள்ளத்தோடு தப்பித்தேன்என ஓடினான். மன்னனைநோக்கி ஓடினான். ஆணையிட்டமன்னனின் அடிகளில் வீழ்ந்தான்.

"அரசே! வேண்டாம் அந்தஅழகுராணிஎனக்கு; வேதனைப்பட்டது போதும்; இனிஎன்னைச் சோதனை செய்யாதீர்; அந்தச் சொகுசுக்காரியிடம் நெருங்க முடியவில்லை அரசே, நெருங்கமுடியவில்லை; நெருங்கினதும் நெருப்புக்கனல் வீசுகிறது; தாமதித்திருந்தால் நான் சாம்பலாகி இருப்பேன்."

"என்ன கலேர்! உனக்கென்ன பைத்தியமா? அவளென்ன மாயக்காரியா? மந்திரவாதியா? கோழையடா நீ; பேதையிடம் பின்வாங்கியிருக்கிறாய்; போரிலேசிங்கம், இதற்காபுறமுதுகு காட்டுவது."

"இல்லைஅரசே! ஆயிரம்பேர் என்னோடு போர்செய்யவந்தாலும் வீறுகொண்டு வெட்டிச்சாய்ப்பேன்; அந்த வேல்விழியாளை நெருங்க என்னால்முடியாது."

"உண்மையைஅறிய என்உயிர்த்தோழனை அனுப்புகிறேன்; நீ சொல்வது உண்மையானால் முதலில்அவளுக்குச் சித்திரவதை; பின் சிரச்சேதம்."

தூதுவனை அனுப்பினான் மன்னவன். சென்று பார்த்துவந்தவனும் கலேரைப் போலத்தான் கூறினான்.

"உரோமைநாட்டின் சரித்திரமே கண்டறியாத ஒருபுழு என்னையே எதிர்க்கிறது; எங்கே, கொடுமைசெய்யும் எனதுபணியாட்கள்? அவர்களிடம் நான்ஆணையிட்டதாகச் சொல்லும்அமைச்சரே; முதலில் சித்திரவதை; பிறகு வெட்டிஎறியவேண்டும் அந்தச்சுந்தரியை."

முழக்கத்தோடு அவனுடையஒநாய்கள் தங்கள்வேலையை ஆரம்பித்தன. சூசானாள் கண்ணீரைப் பன்னீராக்கிப் பரமனுக்குக் காணிக்கையாகக்கொடுத்தாள். உடலிலிருந்து சொட்டும் இரத்தத்தை வேதனைநீராக்கிச் சோதனையைக்கழுவினாள். கன்னிமையும், கற்புந்தான் தனதுசெல்வம்என்ற ஒரேயொருலட்சியத்தில் தனதுஉயிரையே பலியிடத்துணிந்தாள். அவளின்உயிரைவாங்க விழுந்தஒவ்வொரு அடிக்கும் யேசுவேஎன்ற இன்சொல் கேட்டதேயன்றிச் சம்மதிக்கிறேன் என்ற சதிசொல்கேட்கவில்லை.

மன்னன்மருண்டான். அடியின் உரத்தால் மான்விழியாள் மண்டியிட்டுவிடுவாளென மனப்பால்குடித்தான். மாறாகநடந்துவிட்டது; மனங்கொதித்தான். கோடரியால் வெட்டித்தள்ளுங்கள் தலையைஎன்று கொக்கரித்தான். கொடியவனின்வாய்வீச்சு வாள்வீச்சாக மாறியது.

மங்கை — மங்காதமணிவிளக்கு — மாசில்லாமாணிக்கம் — கன்னிமையின் உயிர் — கற்பின்சிகரம் — மண்ணிலே சாய்ந்தது. இல்லை... ஆண்டவனின் மடியிலே புகழ்உடலோடு 'கற்பின்சிகரம்' என்ற பொன்முடி ஆடிச்சாய்ந்தது. மன்னன்சிரித்தான். வெற்றிபெற்றுவிட்டேன் என்றவேகத்தால் வெறிகொண்டு சிரித்தான்.

மன்னாதிமன்னர், உலகைக்காக்கும் யேசுமன்னர் புன்னகையோடு அவளை வரவேற்றார். கற்பின்சிகரமே வா! என்று கரம்விரித்து வரவேற்றார்.

— தோணி

மதிப்புரைகள்

## சரித்திர கதாவாசகம் ஐந்தாம் வகுப்பு

| | |
|---|---|
| ஆக்கியோன்: | இ. தர்மலிங்கம், புன்னாலைக் கட்டுவன். |
| பதிப்பாளர்: | சுன்னாகம்: வட—இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தார். |
| பிரசுரம்: | வீரகேசரி அச்சியந்திரசாலை, கொழும்பு. |
| விலை: | ரூபா 1 சதம் 80. |

சிறுவர்களுக்குப் பொது அறிவை வளர்த்துத் தேசாபிமானத்தை ஊட்டி அவர்களை நாட்டின் உத்தமபிரசைகளாக்குவது சரித்திர பாடமாகும். இதன் அவசியத்தை உணர்ந்தே வித்தியாபகுதியினரும் இரண்டாம் வகுப்புத் தொடக்கமாக அப்பாடத்தைப் போதிக்கவேண்டுமென்று கட்டளையிட்டுள்ளார்கள்.

சரித்திரம் காலவரையறைக் குட்பட்டதாதலால் காலஉணர்ச்சி யற்ற பன்னிரண்டுவயதுச் சிறுவர்களுக்கு அப்பாடத்தைப் படிப்பிப்பது வெகு வலையானதே. ஆகவே, சிறுவர்களுக்குச் சரித்திரத்தைக் கதைமூலமாகக் கற்பிப்பதே சாலவும் பொருத்தமாகும். இவ்விதியை அடிப்படையாகக்கொண்டு ஆசிரியர் 2-ம் 3-ம் 4-ம் வகுப்புகளுக்கு ஏலவேதானே நூல்கள்ஆக்கியுள்ளார். இப்போது ஐந்தாம்வகுப்புச் சிறுவர்களின் வயதுக்கு இயைவானதும், வித்தியாபகுதியினரின் பாடத்திட்டத்திற்குப் பொருத்தமுமான இச்சரித்திர நூலை எழுதியுள்ளார்.

இந்நூல் (கி. — பி. 1500 வரை) இலங்கைச் சரித்திரத்தையும, உலக சரித்திரத்தையும் அடக்கியுள்ளது. சரித்திரத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் தொடர்புநீங்காத வகையில் கோவைப் படுத்தப்பெற்று அமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு மாணவர்க்குக் கவர்ச்சியூட்டத்தக்க தேசப்படங்களும், பெரியோர்களின்படங்களும் முக்கியமான கட்டடங்களின் படங்களும் வேண்டியஅளவுக்குச் சேர்க்கப்பட்டிருப்பதோடு பல விகற்பங்கொண்ட மீட்டற்பயிற்சிகளும் இடம்பெற்றுள்ளன.

எனவே, மாணவர் தாமாகவே முயன்றுகற்றுச் சரித்திரபாடத்தில்ஆர்வம்கொள்வதற்கு இந்நூல் பெருந்துணையாய் அமையுமென்பதே எமது திடமான நம்பிக்கையாகும். எமக்கு அனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

## சகாயமாதா சரித்திரம்

| | |
|---|---|
| ஆக்கியோன்: | காவலூர் கவிஞர், ஜி. எம். செல்வராசா. |
| பதிப்பாளர்: | ஜேக்கப் மைக்கேல், 573 புளுமெண்டால் ரோட், கொழும்பு. |
| பிரசுரம்: | விவேகா அச்சகம். |

"சதா சகாயமாதா" பக்தி மக்களிடையே இன்றுபரவிவருகிறது. குக்கிராமங்களிலிருக்கும் சிறிய தேவாலயங்களிற்றானும் அத்திருத்தாயாரின் படம் அழகுடன் மிளிர்ந்து கொண்டிருப்பதைக்காணலாம். பக்தர்களுக்கு வேண்டும் ஆன்மசரீர நன்மைகளை அளப்பிலாவகையாக அள்ளிச்சொரியும் அத்திருத்தாயாரின் சரித்திரவரலாற்றை ஆசிரியர் இந்நூலிலே அழகாக எடுத்துக்காட்டுகிறார்.

இஃது, சதாசகாயமாதா படத்தின் வரலாறு, மாதாசெய்தருளிய புதுமைகள், மாதாபேரில் அம்மானைமுதலாம் அரியபாடல்கள், நவநாட் செபங்கள் ஆகியநான்குஉட்பிரிவுகளை உடையது. இதிலே மாதாசெய்தருளிய அற்புத சகாயங்கள் பல எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. அவற்றைப்படிக்கும்போது கன்மனமும் கரைந்துவிடும். அத்தோடு சொல்லழகும், பொருளழகும், இசையழகும் ஒருங்கியைந்து விளங்கும் கவிஞரின் இனியபாடல்கள் நூலுக்குத் தனியழகைத் தந்துநிற்கின்றன. மாதிரிக்கு ஒன்றுகாட்டுவம்.

"அலைகடலின் துரும்பானேன்
கரியின் வாயில்
அகப்பட்ட கனியானேன்
கொல்லர் தம்மின்
உலையிலிட்ட மெழுகானேன்
அரவின் வாயில்
உட்புகுந்த தவளைதனுக்
கொப்பா யானேன்
குலையிழந்த வாழையதின
நிலையா னேக்
குவலயத்தில் வாடுகிறேன்
அம்மா! தாயே!!
நிலையுணர்ந்தோர் தொழிலிரங்கி
நிலைக்கத் தந்து
நித்தியமும் காத்தருள்வாய்
சகாய தாயே"

எனவே, திருச்சபை அதிகாரிகளுடைய அனுமதியின்பேரிற் பிரசுரிக்கப்பட்ட இந்நூலானது மாதாவின் பக்தர்களுக்கெல்லாம் ஓர் அரிய பொக்ஷமாகுமென்பதற் செட்டுணையும் ஐயமின்று. எமக்கனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

## நாளு சங்கதிகள்

— வத்திக்கானிடமாய்ச் சுதந்திர தேசியசீனாவின் பிரதிநிதியாகநியமனஞ் செய்யப்பெற்ற டக்றர் எச். ஷுகாங் அவர்கள் போர்மோசாவிலிருந்து ரோமைநகருக்குப் பிரயாணப்பட்டிருக்கின்றார். ஓர்கத்தோலிக்கர் அல்லாத இவர் ஏழுவருடங்களுக்குப்பின் திரும்பஅங்குசெல்லுகின்றார் 1943-ம் ஆண்டு சீனாவுக்கும், வத்திக்கானுக்குமிடையே இராசியஉறவு ஏற்பட்டபின் 1947-ம் ஆண்டுவரையில் இவர்வத்திக்கானிடமாகச் சீனப் பிரதிநிதியாய் இருந்தவர்தார்.

* * *

— பிலிப்பைன்தீவிலே 132 வயதுடைய ஒருபாட்டி இருக்கின்றாள். இவளுக்கு ஏழுபிள்ளைகளும், 300 பேரப்பிள்ளைகளும் இருக்கின்றார்கள். தான் தினமும் இரண்டு அல்லது மூன்று முறை ஸ்நானம் செய்துகொள்வதாகவும், மரக்கறிவகைகளையே சாப்பிடுவதாகவும், அதனால்தான் தீர்க்காயுள் பெற்றுச் சுகமாகச் சீவித்து வருவதாகவும் இந்தக்காலங்கண்ட பெரும் பாட்டி கூறுகின்றாளாம்.

* * *

— ஜேர்மனியிலே மூனிச் நகரில் அமெரிக்க கோர்ணல்ஒருவர் தனது வலதுகண்ணையும், சார்ஜன் ஒருவர் தனது இடதுகண்ணையுங் கொடுக்க, அதனால் அந்நகரில் இருந்துவருகின்ற அமெரிக்கபட்டாள விசாரணைப்பாதிரியாரின் மனைவியாரான திருமதி ஜோன்ஸ்எனும்மாது ஓர்குருடியாகாது தப்பிப்பிழைத்தாரெனத் தந்திச்சமாசாரம் கூறுகின்றது. அவ்விருவரினதும் கண்களின் மேற்படலம் சத்திரவைத்தியங்கொண்டு திருமதிஜோன்ஸின் கண்களில்வைத்து ஒட்டப்பட்டமையால் அம்மாது பார்வையடையலானாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மலைஉச்சியில் மாதாசுரூபம்

இத்தாலிய மலையேற்றகாரர் சென்ற ஆடிமாதம் 31-ந் திகதியன்று உலகில் இரண்டாவது மகாஉந்நதமான கொடவின் ஆஸ்ரின் மலைஉச்சியை அடைந்து அங்கு "மிலான மாதா" வின் சிறியதிருச்சுரூபம் ஒன்றை வைத்துவிட்டுத் திரும்பியுள்ளனர். எவறெஸ்ற் சிகரத்தைக் காட்டிலும் 900 அடிமாத்திரமே பதிவான — அதாவது 28,250 அடிஉயரமான இம்மலைமீது இந்தமலையேற்றக்கோஷ்டி ஏறப்புறப்படுமுன் சிலதினங்களின் முன் காலஞ்சென்ற மிலான் நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் ஸ்கூஸ்றர் ஆண்டவராலே அவர்களுக்கு இந்தச் சுரூபம் வழங்கப்படலாயிற்று. இந்தக் கோஷ்டி மிலான் நாயகியின் பாதுகாவலில் வைக்கப்பட்டு, மிலான் சர்வகலாசாலையில் பூகர்ப்பசாஸ்திர போராசிரியரான டக்றர் ஆர்டிற்றோ தெசியோ அவர்களால் வழிநடத்தப்படலாயிற்று. இந்தமலைஉச்சியில் இத்தாலிய, பாகிஸ்தான் கொடிகளும் ஏற்றிப் பறக்கவிடப்படலாயின.

### தமியான்சுவாமியாரின் கல்லறை

ஹவேயன் தீவுமக்களான ஐம்பது கத்தோலிக்கர் சமீபத்திலே ரோமாபுரிக்குத் திருயாத்திரை செய்துவிட்டுத் தங்கள் நாட்டுக்குத் திரும்புமுன் பெல்ஜியத்தைச்சேர்ந்த லூவெயின் நகர் செல்வதற்கும், சென்று மொலொக்காய்தீவிலே குஷ்டரோகர்களுக்காகத் தமதுவாழ்க்கையைத் தியாகஞ்செய்து, குஷ்டரோகர்களின் அப்போஸ்தலரெனக்கொண்டாடப்பட்டுவந்தவண. பீற்றர் தமியான்சுவாமியவர்களின் கல்லறையைத் தரிசிப்பதற்கும் சந்தர்ப்பங் கண்டுகொள்ளலானர்கள். கல்லறையைத் தரிசித்தபின் அவர்கள் திறெமெலூ எனும் இடத்திலுள்ள தமியான்சுவாமியாரின் இல்லத்தையும் தரிசிப்பதற்காக அங்கு சென்றார்கள். ஹவேயன் தீவுகளில் மொலொக்காய் தீவும் ஒன்றாகும்.

### மேற்றிராணியாரின் மரணசாதனம்

அமலோற்பவ மரியநாயகி சபையைச் சேர்ந்தவரும், வடதுருவ விக்கார் அப்போஸ்தலிக்குவாக விளங்கியிருந்தவருமான மகாவந். பிறேனற் ஆண்டவர் தமது தொண்ணூறும் வயசிலே சமீபத்தில மரணமடைந்தபோது, அவர் 1941-ம் ஆண்டு எழுதிவைதத மரணசாதனம் கண்டெடுத்துப் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கிறது. அதில் எழுதப்பட்டிருந்தது வருமாறு: "ஓர் வறிய மனிதரைப்போல நாம் அடக்கஞ் செய்யப்படவேண்டுமென விரும்புகிறோம்; ஓர் துறவியும, மேற்றிராணியாரும் என்றமட்டிலே நம்மிடம் ஒன்றுமில்லை; நமது வழிநடத்துகையாலே நாம்குறைபாடுசெய்திருக்கக்கூடியவர்களும், மனநோவுஉண்டுபண்ணியிருக்கக் கூடியவர்களுமான மிஷனரிமார். விசுவாசிகள், மற்றேனையோரிடமும் தாழ்மையாக மன்னிப்புக்கேட்கின்றோம்" என்பதுவே.

### அர்ச்சியசிஷ்டர்களின் பக்கமாக

எட்டுமுறை இத்தாலியபிரதமராயிருந்து சமீபத்தில் காலஞ்சென்றவரும், இத்தாலியைத் திரும்பச்சீர்ப்படுத்தி நிர்மாணித்த பெரிய அரசியற்தலைவரெனக் கொண்டாடப்படுகிறவரும், உத்தமகத்தோலிக்க பசதிமானுமாகிய சிஞ்ஞோர் ஆல்சித் தேகாஸ்பெரி அவர்களின் சரீரமானது பாப்பரசரது விசேஷ அனுமதிபேரில் ரோமைநகரின் மதில்களுக்கு வெளியேயுள்ள அர்ச். லோறெஞ்சியாரின்மகாலய பெரிய பலிபீடத்தின்கீழுள்ள நிலவறையிலே அர்ச். லோறென்ஸ், அர்ச். ஸ்ரீபின், அர்ச். ஜஸ்தின் எனும் மூன்று அர்ச்சியசிஷ்டர்களினதும் கல்லறைகளின்பக்கமாக அடக்கஞ்செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு அடக்கஞ்செய்யப்படுமுன் அதுரோமாபுரியிலுள்ள ஜேசுஎனும ஆலயங் கொண்டுசென்று, இத்தாலிய ஜனதிபதி, அத்தேசமந்திரிமார், ஸ்தானிகர்கள, இத்தாலியிலுள்ள பல்வேறு அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகள், மற்றும் பெருந்திரளானோர்சமுகமாகத் துக்கப்பாடற்பூசை நிறைவேறியது. அதன்மேல் பாப்பரசரின் விக்கார்ஜெனறலான கருதினல்மிக்காரு ஆண்டவர் கடைசி ஆசீர்வாதங்கூறலாயினர்.

## கத்தோலிக்க



## சமாச்சாரம்

### லத்தீனுக்குப்பதில் ஆங்கிலம்

அமெரிக்கஐக்கியதேசத்திலே ஞானஸ்நானம், மெய்விவாகம், அவஸ்தைப்பூசுதல் ஆதியன உட்பட ஒருதொகையான திருச்சடங்குகளை லத்தீன் பாஷைக்குப்பதில் ஆங்கில பாஷையில் நடத்தப் பரிசுத்த ஸ்தானம் அனுமதியளித்திருக்கிறது. இது செய்தியை மில்வாக்கிநகர் அதிமேற்றிராணியாரான மியர் ஆண்டவர் அங்குநடைபெற்ற தேசியகத்தோலிக்க ஆராதனைத் திருச்சடங்குகளின் மகாநாட்டில் வெளியிட்டுள்ளனர். ஆனல், அந்தந்தத்தேவதிரவியானுமானங்கள் ஆதியவற்றின் சொற்கள் இனிமேலும் லத்தீனிலேயே உச்சரிக்கப்படவேண்டும். இந்தஅனுமதி திவ்விய பூசைக்குச் செல்லமாட்டாது. ஆராதனைத் திருச்சடங்குகளின் சிலபகுதிகள் ஆங்கில பாஷையில் வழங்கப்படவேண்டுமென்பது அத்தேசத்திலே கடந்த 150 வருடகாலமாக விவாதிக்கப்பட்டுவந்திருக்கிறது. பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி உட்பட அநேகஐரோப்பியநாடுகள் ஏலவேதானே சுயபாஷையில்நடத்தும் [illegible] றிருக்கின்றன.

### மகாராணியாரும் கத்தோலிக்கரும்

இங்கிலாந்திலே யுத்தகாலத்தில ஜேர்மன் வெடிகுண்டுகளால் பாழடைந்த சவுத்வாக் நகர கத்தோலிக்க ஆசனக்கோவிலைத் திரும்பக்கட்டியெழுப்பும் நிதிக்கென்று எலிசபேத மகாராணியாரும், அவர்நாயகரும், அவருடைய தாயாரான எலிசபேத் இராணியாரும் நன்கொடைகள் வழங்கியதையிட்டு ஸ்கொத்திலாந்த சுவாதீன புரொட்டஸ்தாந்தசபைக் கம்மிஷன் செய்துள்ள ஆட்சேபனைகளைக் கண்டனஞ்செய்து அங்கு பிரசுரமாகும் "ரைம்ஸ்" முதலாம் சமயச்சார்பற்றபத்திரிகைகள் காரசாரமாக எழுதியிருக்கின்றன. "புரொட்டஸ்தாந்த சமயத்தின் காவலர்" என்றமட்டிலே மகாராணியாரின் நிலைமையானது, கத்தோலிக்க கிறீஸ்தவர்களையும், கத்தோலிக்கர்அல்லாத எண்ணிறந்த கொள்கை வேறுபாடுடைய புரொட்டஸ்தாந்த கிறீஸ்தவர்களையும்போலவே கிறீஸ்தவர்கள் அல்லாத கோடிக்கணக்கான மக்களையும் அவர் ஆட்சிசெய்வதுடன் முரண்பட்டதல்ல; மனித துவேஷமும், லோகாயதமும் தலையெடுத்திருக்கும் இக்காலத்திலே கிறீஸ்துநாதரின் திருச்சபை எங்கெங்குமே ஆபத்தில் இருக்கின்றது; அங்ஙனமாக இத்தகைய குறுகிய சமயமனப்பான்மையைக் கவனிக்கும்போது "ஆச்சரியமல்ல" என்றுதான் சொல்லமுடியும்" என்று "ரைம்ஸ்" பத்திரிகை எழுதி, "மகாராணியாரின் பிரசைகளில் மற்றெவரையும் போலவே கத்தோலிக்கரும் இருக்கின்றார்கள்" என்று பக்கிங்காம்மாளிகையிலிருந்து அறிவிக்கப்பட்டதுசரியெனத் தாபித்துவிட்டிருக்கிறது.

### திருக்கல்லறை மகாலயம்

நம்திருமீட்பரின் திருக்கல்லறை மகாலயத்தில் பழுதுஏற்பட்டிருக்கிறதென்றும், யாதும்செய்யப்படாவிடின் அது வீழ்ந்துபோகுமென்றும் எஞ்ஜினியர்கள் கூறுவதாலே அதனைப் பழுதுபார்ப்பதா, அன்றேல் முற்றாகத் திரும்பக் கட்டியெழுப்புவதா என்பதுபற்றித் தீர்மானிக்க ஜோர்தான்மன்னர் ஓர் கம்மிற்றியை நியமித்திருக்கின்றார், இந்த மகாலயம் நமது திவ்வியகர்த்தரின் திருமேனி அடக்கஞ் செய்யப்பெற்றுப் பிந்தஅவர் உத்தானமான இடத்திலே கட்டப்பட்டுள்ளது. தற்போது இந்தமகாலயம் கத்தோலிக்க திருச்சபையினதும், [illegible], ஆர்மீனிய பிரிவினைச் சபைகளினதும் ஆதீனத்தில் இருந்துவருகின்றது. அதனல் இதனைப் பழுதுபார்க்கவோ, அன்றேல் மீண்டும்கட்டியெழுப்பவோ ஏற்படுஞ்செலவை மூன்றுசபைகளுமே பொறுக்கவேண்டியன. 1949-ம் ஆண்டு இதன்டோம் அக்கினிவாய்ப்பட்டுச் சேதமடைந்தபோது அதனைப் பழுதுபார்த்த செலவை மூன்றுமே பொறுத்தன.

### பிரான்சீஸ்கும் ஜசிந்தாவும்

பாத்திமாபதியிலே பரிசுத்த தேவதாயாரைக் காட்சியிற் காணும்பாக்கியம்பெற்றபிரான்சீஸ்கோ, ஜசிந்தா எனும்பிள்ளைகள் இருவருக்கும் முததிப்பேறுபெற்றபட்டம் சூட்டுதற்கான விசாரணையின் ஆரம்பபரிசீலனை பூர்த்தியடைந்து, பரிசீலனைப்பத்திரங்களும் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டுவிட்டனவென்று லீறியாநகர் மேற்றிராணியார் தெரிவித்திருக்கின்றார். காட்சிபெற்ற மூன்றுபிள்ளைகளிலும் வயதில் மூத்தலூசியா போர்த்துக்கேய கன்னிகாமடம்ஒன்றில் ஓர்கார்மேலசபைக் கன்னியாஸ்திரியாக இருந்துவருகின்றாள்.

### பிரான்சிய ஜனதிபதி

பிராஞ்சிய ஜனதிபதியான றெனெ கொட்ரி அவர்கள் "நேர்மை, மதியூகம், பொதுநலச்சேவை நிறைந்த ஓர் உத்தமர்" என்று லண்டன் "ரைம்ஸ்" கூறுகிறது. இவர் உத்தியோக பதவி ஏற்கும்வைபவத்திற்குப் பாப்பரசர் பிரதிநிதியும் சமுகமளித்தார். இது விஷயமாய் "ரைம்ஸ்" மேலும்கூறுவதுவருமாறு: "றெனெ ஓர்நடைமுறையான கத்தோலிக்கர். அவருடைய இல்லறவாழ்க்கையும், சீவியஅபிமானமும் மிகஎளியவைகள். வலதுசாரிக்கட்சியைச் சேர்ந்தவராயினும், நடுநிலைமை வகிக்க நன்கறிந்தவர்."

### சிறையில்இறந்த குருவானவர்

முன்னர் ரூமேனிய ஸ்தானிகருள் ஒருவராயிருந்து தமது வாழ்க்கையின் பிற்பட்டகாலத்தில் ஓர் குருவாய்வந்த வண. விலாடிமிர் ஜிகாசுவாமியார் தமது 80-வதுவயதில் ரூமேனியசிறைச்சாலைஒன்றில் மரணமடைந்திருக்கிறார். இவர் அநேகவருடகாலம் பரீஸ்நகரிலுள்ள சனநெருக்கமான சேரிஒன்றில் சேவை செய்து வந்தார். அப்போது இவர் ஓர் சின்னக்கோவிலாக அமைக்கப்பெற்ற பழைய றெயில்வேப் பெட்டிஒன்றில் வசித்து வந்தார். பின்னர் இரண்டாவது உலகயுத்தம் தொடங்குமுன் ரூமேனியாவுக்குத் திரும்பினர். யுத்தம்முடிந்தபின் அந்நாட்டைவிட்டு வெளியேசெல்ல இவருக்குக் கம்யூனிஸ்தர்கள் அனுமதியளித்தனர். ஆனல், கடைசிநேரத்தில் அங்குதானே இவர் தங்கிவிடத் தீர்மானித்தார். அதன்மேல் கம்யூனிஸ்தர்கள் நடத்திவந்த வேதகலாபனையையிட்டு ஆட்சேபித்தவிடத்து இவர்லகதுசெய்யப்பெற்று இருபதுவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானோபதேசக் கோர்வை

ஞானோபதேசக் கோர்வை 3 பாகங்களும் தற்போது எம்மிடம் விற்பனைக்கிருக்கின்றன. தேவையானோர் மேல்வரும் விலாசத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## புரட்டாசி மாதம்

போதுக்கருத்து:— கத்தோலிக்க சேவையிலே வாலிபர்கள் எண்ணிக்கையிலும், ஞானத்திலும் முன்னேறும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து:— திருச்சபையின் சமூகதர்மக் கொள்கை வேத போதகநாடுகளில் அதிகமாகப் பரவி நன்கு மதிக்கப்படுவதற்காக மன்றாடிக் கொள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்

1954-ம் ஆண்டு
புரட்டாசி மாதம் 9-ந் திகதி

## வியாகுலமாதா பக்தி

புரட்டாசிமாதம் 8-ந் திகதி பரிசுத்ததேவதாயாரின் ஜனன திருநாளையும், 12-ந்திகதி அவரது மரியாய்என்னும் திருநாமத்திருநாளையும், 15-ந் திகதி வியாகுல மாதாவின் ஏழுவியாகுலத்திருநாளையும் திருச்சபை கொண்டாடிவருகின்றது. பிந்திய திருநாளின்போது மாத்திரமல்ல, தபசுகாலத்தில்வரும் ஆறும் வெள்ளிக்கிழமையிலும், புரட்டாசிமாதத்தின்ஒவ்வொருதினத்திலும் இந்த ஏழுவியாகுலங்களையும் நினைவுகூர்ந்து வியாகுல மாதாவை விசுவாசிகள் பக்தி செய்துவர வேண்டுமென்பது திருச்சபையினது கருத்தும், விருப்புமாயிருப்பதால் இப்பக்தியை நன்கு அறியவும், அநுட்டிக்கவும் முயலுவோமாக.

தமதுசீவியகாலத்திலே பரிசுத்தகன்னித்தாயார் எத்தனையோசமயங்களில், எத்தனையோ மூகாந்திரங்களினால், எத்தனையோவியாகுலங்களை அநுபவிக்க நேர்ந்தது. ஆயினும்,

1. சிமியோன் செப்பிய தீர்க்க தரிசனத்தைக் கேட்டபோதும்,
2. தேவகுழந்தையைப் பாதுகாக்கும் பொருட்டு இரவிரவாக எகிப்து நாட்டிற்குத் தீவிரித்துச்சென்றபோதும்,
3. பன்னிருபிராயக் குமாரனை மூன்றுநாள்காணாது தேடித் திரிந்தபோதும்,
4. சிலுவைசுமந்து செல்லும் திருக்குமாரனை மினவியபோதும்,
5. அவர் சிலுவையில் நிஷ்டூரமாய் அறையுண்டு மரித்தபோதும்,
6. அவரது திவ்வியமேனி சிலுவையால் இறக்கப்பட்டுத் தமதுதிருமடியில் வளர்த்தப்பட்டபோதும்,
7. அஃது கல்லறையில் அடக்கப்பட்டுக் கண்ணுக்கு மறைந்தபோதும்,

பரமதாயார் அடைந்த ஏழு வியாகுலங்களுமேதெரிவுசெய்து தியானிக்கப்படுகின்றன. ஏழு வியாகுலங்களும் ஏழுவாள்களைப்போல் மாதாவின் மாசற்றஇருதயத்தை ஊடுருவி வாதிக்கலாயின. தமதுதேவனும், இரட்சகரும், ஏககுமாரனுமானவர்—மானிடலட்சணங்களும், தைவிகலட்சணங்களும் ஒருங்கே அமைந்துவிளங்கித் தமது கண்ணுக்கு ஒளியும், உயிருக்கு உயிருமானவர் — தமது கண்முன்பாகவே சிநதாகுலப்படவும், நிந்தை அவமானங்களாற் பூரிக்கப்படவும், அடிமைபோலக் கற்றூணிற்கட்டுண்டு தசைகிழிய, உதிரம்பொழிய, குரூரமாய்அடிக்கப்படவும், கூரிய முண்முடி சிரசில் அமுக்கி இருத்தி அழுத்தப்படவும், பாரச்சிலுவைசுமத்தி நடத்தப்படவும், பெரும் இருப்பாணிகளால அஸ்தபாதங்கள் சிலுவையில் அறையப்படவும், மூன்றுமணித்தியாலமாக ஆற்றொணா அகோரவாதைப்பட்டு, மானிடராலும், தேவபிதாவாலுமே கைவிடப்பட்டு, கடின அவஸ்தைப்பட்டு உயிர்விடவுங் கண்டு மனோவாக்குக்கெட்டாத வியாகுலப்பட்டுத் தமதுவியாகுலங்களைத் தமதுதிவ்வியமைந்தனின் பாடுகளுடன் ஏகமாகஅநுபவித்து எங்கள்நித்தியஇரட்சணியத்துக்காக உடன்வருந்திய தேவதாயாரும், எங்கள் நேசதாயாருமாகிய வியாகுலத்தாயாருடனே நாங்கள் அநுதாபியாதிருக்கலாகுமா? அர்ச்சியசிட்டர்கள்சிலர் சொல்வதுபோலச் சிலுவையடியில் இரத்தக்கண்ணீர்விட்டு அழுததாயாருடனே நாமும் துக்கக்கண்ணீர்விட்டு அழாதிருக்கலாகுமா?

அர்ச். வின்சென்ற் பலொட்ரி நம்முடையகாலத்து அர்ச்சியசிட்டவர். மாதாவின் வியாகுலத்தில் மிக்கான பக்தியுடையவர். இப்பக்திமுயற்சியைத் தாம் மாத்திரம் அநுட்டிப்பதோடு திருப்திப்படாது, தமதுஅதிகாரத்துள் அடங்கிய குருப்பிரசாதிகளுக்கும் அதனைஓர்கடமையாக விதித்தருளினர். வியாகுல மாதாசெபம்ஒன்றைத் துண்டுபத்திரமாக நாலு பாஷைகளிலும் அச்சேற்றிப் பதினாயிரக்கணக்கானபிரதிகளை ஆங்காங்கு பரப்பினர். ஓர்முறை ஓர் ஆளில் ஆவேசமேறியிருந்த ஓர் பிசாசு பேசத்தொடங்கி: வியாகுலமாதாவின் வியாகுல பக்தியைப் பிரமாணிக்கமாய் அநுசரித்துவந்தவர்களின் அந்திம வேளையிலே துர்மன அரூபிகளாகியதாங்கள் அவர்களைத் துர்ச்சோதனைகளால் தாக்கச் சர்வேசுரன் தங்களுக்குவிடைகொடுக்கவில்லையென்றும், வியாகுல மாதாமீது பக்திகூர்ந்துவந்தவர்கள் நித்தியகேட்டுக்குஉள்ளானதில்லையென்றும இவர்முன்பாகப் பகிரங்கமாய் அறிக்கையிட்டது. இஃதுஉண்மையேயென முழுதும்நம்பிய இந்தஅர்ச்சியசிட்டர் சமயம்வாய்க்கும்போதெல்லாம் இச்சம்பவத்தைச் சகலருக்கும் எடுத்துக்கூறிவரலாயினர். ஆதலால் வியாகுல மாத பக்தியை நாம் மனோற்சாகமாய் அநுட்டித்துவரக் கருத்தாயிருந்துவருவோமாக!

## பிரதமரின் விஜயம்

பிரதமர் சேர்ஜோண் கொத்தலாவல அவர்கள் இம்மாதம் 28-ந் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாரபூர்வமாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு விஜயஞ் செய்யவிருக்கின்றார். ஐக்கிய தேசீயக்கட்சியின் தலைவரென்றமட்டிலோ, அன்றேல் சிங்கள சாகியத்தின் முதல்வரென்றமட்டிலோ அவர் இங்குவரவில்லை. ஆனால், இலங்கைப் பிரதமர்— இலங்கைஅரசாங்கத்தின் தலைவா என்றமட்டில்தான் முதன்முதலாக அவர் இங்கு விஜயஞ்செய்யவிருக்கின்றார். அதனால அவர் இங்கு விஜயஞ் செய்யும்போது, தங்கள் பாரம்பரியமான விருந்தோம்புங் குணத்தைக் காண்பித்து, அவரை மனப்பூர்வமாக வரவேற்பதும், உபசரிப்பதும் யாழ்ப்பாணமக்களின் பெருங் கடனாகும். அங்ஙனமாக, சமஷ்டிக்கட்சியினர் எனப்படும் தமிழரசுக்கட்சியினர் பிரதமரின யாழ்ப்பாணவிஜயத்தைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்திருப்பதாக அறியவந்து பெரிதும்பிரமிக்கலானோம்.

"பிரதமர் அவர்களின் யாழ்ப்பாணவிஜயத்தைப் பகிஷ்கரிக்கவும, அவருக்குக் கறுப்புக் கொடிகள்பிடிக்கவும் சமஷ்டிக் கட்சியினர் தீர்மானித்திருப்பதாகப் பத்திரிகைகளில் படித்ததும் நான் ஆச்சரியவசதத்தனேன்; இது நேர்மையான செயலாகுமா? யாழ்ப்பாணப் பகுதியில் தற்போது சித்தஞ் செய்யப்படுகின்ற மகத்தான வரவேற்பு அரசாங்கத்தின் தலைவரான பிரதமரைக் கௌரவிப்பதற்காகவே என்பதை இவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்வார்களாக" என்று அரசவாசல்முதலியார் சி. தியாகராசா அவர்கள் யாழ்ப்பாணப்பகுதிச் சனசமூக நிலையங்களின் விழாவில அன்று கூறியதை ஈண்டு நாம் திரும்பவும் எடுத்துக்கூறுகின்றோம். தமிழரசுக்கட்சியினரின் இது செயல் தமிழர்—சிங்களரிடையே குரோதத்தை எழுப்பிப் பிளவைஏற்படுத்தித் தமிழரை ஒதுக்கச் செய்யும்படியான ஓர் விபரீத செயலாகுமென்பதைத் தமிழ்மக்கள் விளங்கிக்கொள்வது அத்துணைபெருங் கஷ்டமன்று.

ஆதலால் அவர்கள் தமிழரசுக் கட்சியினரின் நவீனமுறையான எடுப்பைத் துவேஷித்து, இலங்கையிலே ஜனநாயகத்துக்காக அயராதுழைத்துவருகின்ற பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்களை மனப்பூர்வமாக வரவேற்பார்களாக! வட மத்தியமாகாணத்திலே சென்றவாரஇறுதியில்பிரதமர்நடத்திய சுற்றுப்பிரயாணத்தின் போது, அவர்பகிரங்கமாக, அச்சபயமில்லாது எடுத்துக்கூறிய பொன் மொழிகளை—அதாவது "இலங்கை எந்த ஒருசமயத்திற்கோ, அன்றேல் எந்தஒருசாகியத்திற்கோ சொந்தமல்ல; சகலசமயங்களுக்கும், சகலசாகியங்களுக்குமே சொந்தமானது; இந்நாட்டின்சுபீட்சத்துக்குச் சகலசமயங்களினதும், சகலசாகியங்களினதும ஒத்துழைப்பு அத்தியாவசியகமானது" என்று அழுத்தந்திருத்தமாக எடுத்துக்கூறிய பொன்மொழிகள்—அவர் ஓர்ஜனநாயக அரசியற்தலைவர் என்பதைப் பட்டவர்த்தனமாகக் காண்பிக்கின்றன. இன்னும் ஜனநாயகத்தின் ஜன்மசத்துருவான கம்யூனிஸத்தை எதிர்த்துப்போராடுவதிலே அவர் எத்துணை ஆர்வம் கொண்டுள்ளாரென்பதை நாமெல்லாம் நன்கறிவோம். மேலும் இலங்கையில தமிழ்மந்திரிமாரும் இருந்துவருகின்றனர்என்பதை நாம் மறந்துவிடலாகாது. யாழ்ப்பாணத்திலே நாம் பிரதமரை அவமதித்தால், சிங்களமக்கள் அவிகாயங்கொண்டு நம்முடைய தமிழ்மந்திரிமார் அவர்கள்மத்தியில் அதிகாரபூர்வமாகச் செல்லும்போது பதிலுக்குப்பதில் அவர்களைப் பகிஷ்கரிக்க முனையார்களா? அவர்களுக்கும் பிடிக்கக் கறுப்புக்கொடிகளும், அடிக்கத்தம்பட்டங்களும் இல்லாமற் போகுமா? இவற்றையெல்லாம யாழ்ப்பாணமக்கள் நன்கு சிந்திப்பார்களாக!

## சுதேச வர்த்தமானம்

### கடைசியான இரட்டேமகாத்மையா

இலங்கையிலே டி. ஆர். ஓ. எனப்படும் காரியாதிகாரிகள் நியமனஞ்செய்யப்படுமுன இரட்டேமகாத்மையாக்களும், மணியகாரன்மாரும், அதிகாரங்களுமே இவர்களின் இடத்தை வகித்திருந்தார்கள். தற்போது மணியகாரன்மாருமஇல்லை அதிகாரங்களும இல்லை. இரட்டேமகாத்மையாக்களிலும் கடைசியாகஎஞ்சியிருந்த திரு.சி பி தனுவில் அவர்களும் இம்மாதம் தமதுபதவியிலிருந்து இளைப்பாறுகின்றார். இவர் இளைப்பாறுவதுடன் இலங்கையிலே இரட்டேமகாத்மையாக்களின் பரிபாலனம் முடிவடைகின்றது.

### யானைக்குப் பலியானவர்

சென்றசனிக்கிழமைபிற்பகல் 5 மணியளவில் மன்னார்வீதியிலே ஓர்சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பகிரங்க வேலைப்பகுதி ஓவசியரான திரு. தில்லையம்பலம் பொன்னுத்துரை யென்பவர் மதவாச்சிறெயில்வேஸ்ரேஷனிலிருந்து நான்குமைல்தூரத்துக்கப்பால் யானை ஒன்றால் தாக்கப்பட்டு மரணமானார். இவரும், மற்றொருவரும் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபொழுது யானையைக்கண்டதே மற்றவர் பாய்ந்தோடிவிட்டார். இவர் ஓடஎத்தனித்தபோது அவரைத் தாவிப்பிடித்துத்தலையையும், மார்பையும் நெரித்துக்கொன்றுவிடலாயிற்று.

### மிளகின் உத்தரவாதவிலை

மிளகு, எள்ளு, மஞ்சள், புளிஆகியவற்றின் உத்தரவாத பழையவிலைகள் திருத்தப்பட்டு, வருகிறஐப்பசிமாதம் 1-ந் திகதியிலிருந்து புதிய விலைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. மிளகின் விலை அந்தர் 332 ரூபாவிலிருந்து 112 ரூபாவாகவும், எள்ளின்விலை அந்தர் 56 ரூபாவிலிருந்து 41ரூபாவாகவும் கொட்டையில்லாப் புளியின்விலை அந்தர் 20ரூபா 16சதத்திலிருந்து 19ரூபா 40சதமாகவும் குறைக்கப்பட்டுள்ளன. மஞ்சளின்விலை அந்தர் 56ரூபாவிலிருந்து 84ரூபாவாக ஏற்றப்பட்டிருக்கிறது. கடுகு, மிளகாய்வற்றல், பாசிப்பயறு ஆகியவற்றின் உத்தரவாதவிலைகளில் மாற்றமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாணவரின் மடுத் திருயாத்திரையின்
## நிகழ்ச்சி முறை

16-18, புரட்டாசி 1954—மாணவிகள்.
18-20, ,, —மாணவர்கள்.

**ஆரம்பதினம் :**

6 மணி பி. ப. — செபமாலை, பிரசங்கம், ஆசீர்வாதம்.
8-30 — இராச்செபம்.

**யாத்திரைத் தினம் :**

6 மணி மு. ப. — காலைச்செபம், செபமாலை, தியானம் (ஆசிரியருக்கு)
7-30 ,, — திவ்விய பூசை.
9-30 ,, — பிரசங்கமும், செபமாலையும்.
11-30 ,, — திவ்வியநற்கருணைச் சந்திப்பு.
2-00 பி. ப. — செபமாலை.
3-00 ,, — சம்பாஷணை (ஆசிரியருக்கும் மாணவருக்கும் இருபிரிவாக)
5-00 ,, — திருமணித் தியாலம், ஞானஸ்நானவாக்குப் புதுப்பித்தல், தேவதாயாருக்கு ஒப்புக்கொடுத்தல்.
8-00 ,, — தேவ தாயாரைப் பற்றிய சம்பாஷணை — இராச்செபம்.

**முடிவு தினம் :**

5-30 மு. ப. — திவ்விய பூசையும், யாத்திரிகர்கள் ஏகமாகத் தெய்வீக விருந்து அருந்தலும்.
7-00 ,, — பிரியாவிடைச் சந்திப்பு

**கவனிப்பு :—**

இடை நேரங்களில் பாவசங்கீர்த்தனம்செய்யவும், தனிப்பக்தி முயற்சிகள் நடத்தவும் யாத்திரிகர்கள் வேண்டிக்கொள்ளப் படுகிறார்கள்.

## ஆசிரியர்களுக்கு
### அறிவித்தல்

ஐப்பசிமாதத்தில் மடுத்திருப்பதியில நடைபெறும் ஆசிரியர்களின் வருடாந்தஞானஒடுக்கம் இவ்வருடம்நடைபெறாது.

இம்மாதம் 18, 19, 20-ந்திகதிகள் பாடசாலை ஆண்பிள்ளைகளின் மடுத்திரு யாத்திரைத்தினங்கள். இவை ஆசிரியர்களுக்கும் தியான தினங்களாகும்.

இத்திருயாத்திரையிலும், தியான தினங்களிலும் தத்தம் பாடசாலைப் பிள்ளைகளுடனாவது, தனித்தாவது பங்குபற்றிக் கொள்ளுமாறு ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

இத்திருயாத்திரை—தியானமுயற்சியில் பங்குபற்றுபவர்கள் யாவரும் தங்கள் பெயர்களை உடனே நமக்குத் தெரிவிக்கவேண்டும்.

T. A. J. Mathuranayagam,
Gen. Manager, R. C. Schools.
Jaffna 2-9-54.

## அடைக்கலமாதா திருநாள்

பண்டையசீர்சால் வன்னிப்பகுதியில் இயற்கைவளங் கொழிக்கும் 'இலுப்பைக்குளம்' என்னுங் கிராமத்தில் கோவில் கொண்டிருக்கும் அர்ச். அடைக்கலநாயகியின் திருநாள் 5-ந் திகதி சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதற்குமுந்திய திரிதினவிழாக்கள் 2-ந் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாயின. 4-ந் திகதி சனிக்கிழமைமாலை வண. பிலிப் பொன்னையா சுவாமியாரவர்களால் வேஸ்பர்பாடப்பெற்றது. திருநாளன்று காலை பாடற்பூசை நிறைவேறியது. அதனைமேல் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம், கிறீஸ்தவர்களும், மதபேதமின்றிக்குழுமிய பிறசமய அன்பர்களும் புடைசூழ அதிவிமரிசையாக நடந்தேறியது.

—எஸ். எல். சவுந்தரநாயகம்

### பள்ளிக்கூடப் பிள்ளைகளின்
# மடுத் திருயாத்திரை

1. யாத்திரைக் குழுவினர் காங்கேசன்துறையில் இருந்து காலை 6-50 மணிக்குப் புறப்படும் பகல் புகையிரதத்தில் குறிக்கப்பட்ட தினங்களில் (பெண்கள் 16-ந் திகதியும், ஆண்கள் 18-ந் திகதியும்) பிரயாணம செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். இவர்கள் ஏறிச்செல்வதற்குப் பிரத்தியேகமாகக் குறிக்கப்பட்ட 3-ம வகுப்பு வண்டிகள் விடப்படும்.

2. ஆசிரியர்களுக்கும், 12 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கும்உரிய போய்த்திரும்பும் மலிவுப்பிரயாணச் சீட்டின் செலவுவீதம், தனிப்பிரயாணச் செலவின் $1\frac{1}{4}$ பங்கு ஆகும. 12 வயதிற்குட்பட்ட 2 பிள்ளைகள் வளர்ந்த ஒருவர்போல கணிக்கப்பெறுவர்.

3. மலிவுப் பிரயாணச் சீட்டிற்குரிய செலவைக் குழுவினர் புறப்படும் ஸ்தானத்தலைவரிடம் கொடுத்துச் சீட்டுகள் பெற்றுக்கொள்ள வேண்டும்

4. பிரயாணச் சீட்டுகளைப் பத்திரமாய் வைத்துக்கொள்க. திரும்பி வரும் பிரயாணத்திற்கும் அவை வேணடியவையாகும்.

5. பிரயாண நேரசூசியும், ஒருஆளுக்குரிய செலவுவிபரமும் பின்னால் தரப்படுகின்றன

| ஸ்தானப்பெயர் | புகையிரதம் ஸ்தானத்தை அடையும் நேரம் | புகையிரதம் ஸ்தானத்தை விட்டுநீங்கும் நேரம் | மடுறோட்டுக்குச் சென்று திரும்பிவரும் 3-ம்வகுப்புச் சீட்டுச் செலவு விபரம் 12வயதிற்குக் கீழ் | 12வயதிற்கு மேல் |
|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. |
| காங்கேசன் துறை | —— —— | காலை 6-50 | 3-53 | 7-06 |
| தெல்லிப்பளை | காலை 6-54 | ,, 6-56 | 3-47 | 6 94 |
| சுன்னாகம | ,, 7-03 | ,, 7-07 | 3-32 | 6-64 |
| யாழ்ப்பாணம | ,, 7-24 | ,, 7-30 | 3-25 | 6-50 |
| புங்கன்குளம் | ,, 7-50 | ,, 7-54 | 3-22 | 6-44 |
| கொடிகாமம் | ,, 8-41 | ,, 8-47 | 2-88 | 5-76 |
| மிருசுவில் | ,, 8 49 | ,, 8-54 | 2-85 | 5-70 |
| வவுனியா | , 11-45 | மாலை 12-02 | 1-04 | 2-08 |

6 போதுமான பாய் தலையணைகளும், போசனஞ் செய்வதற்கு வேண்டிய பாத்திரவகைகளும் கொண்டுசெல்லுமாறு யாத்திரிகர் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

7. பிரயாணநேரத்தில் யாத்திரிகர் செபமாலையும், ஏனையசெபங்களும் ஓதும்வண்ணம் வேணடப்படுகின்றனர்.

8. மடுவில் இருந்து திருப்பி வருவதற்கு (பெண்கள் 18-ந் திகதியும், ஆண்கள் 20-ந் திகதியும்) காலை 9-54 மணிக்கு மடுறோட்டு ஸ்தானத்தில் இருந்து புறப்படும் புகையிரதத்தில் பிரயாணம் செய்க.

## பொது வர்த்தமானம்

### பறக்குந்தட்டுகளின் இரகசியம்

சிலவருடங்களாக ஆகாயத்திலே காலந்தோறும்பறந்து மக்களைத்திகைக்கச்செய்து வருகின்ற "பறக்குந்தட்டுகள்" பற்றிக் கிடைத்திருக்கின்ற சகல அத்தாட்சிகளிலுமிருந்து, குறைந்த பட்சம் 1948-ம ஆண்டுமுதல் வேறு சில கிரகங்களில்வசிக்கும் மக்கள் இந்தப் பறக்குந்தட்டுகள்மூலம் பூமியை அவதானித்து வருகிறார்களென நிச்சயமாக முடிவுசெய்யப்படலாமென்று போான ஜேர்மனிய சாஸ்திரபண்டிதரான பேராசிரியர் பிலிப் டெசோவர் அவர்கள் கூறுகின்றார். பூமியில்மாத்திரமே மனிதர் வசிக்கிறார்களென்று வேதபுத்தகத்தில் எங்காவதுசொல்லப்பட்டில்லையென்றும் அவர்தெரிவித்திருக்கின்றார்.

### கானக சினிமாப்படம்

'றிங்கோ' எனப்பெயரிய சினிமாப் படமொன்றைத் தயாரிக்குமாறு அமெரிக்க பிரபல சினிமாஉற்பத்தியாளரான திரு. ஜோர்ஜ் ஷெர்லூட்என்பவர் தற்போது கல்கத்தாவந்து சேர்ந்திருக்கின்றார் இந்தப்படத்தைப் பிடிக்கச் செலவாகவிருக்கும்பணம் பத்துலட்சம் டலர். மனிதனால் ஒருபோதுமே பிடித்துக்கொள்ளமுடியாத பயங்கரந்தரும் ஓர்இந்திய புலியைப்பற்றி எவ். ஹெறிக், ஜோர்ஜ் ஷெர்லூட் எனுமிருவரும் சேர்ந்து எழுதிய ஓர் கற்பனை கதையை ஆதாரமாகக்கொண்டே இந்தப்படம் பிடிக்கப்படவிருக்கிறது. பெரிதும் மனவெழுச்சிக்குரிய இந்தப் படத்தில் யானைகள், காண்டாமிருகங்கள், புலிகள், சிங்கங்கள், மலைப்பாம்புகள்உட்பட [illegible] மிருகங்கள்தாம் [illegible] காட்டுமிருகங்களைப் பயிற்றுவிப்பதில் பிரசித்திபெற்ற கிளைட் பியாற்றி என்பவர் இதிலே பிரதமநடிகராய் இருந்துவருவார். சிந்திய, பிரதானியநடிகர்களும் இதிற்கலந்து கொள்வார்கள்.

### செஞ்சீனாவின் போராயத்தம்

தேசீயசீனாவின் இருப்பிடமாகிய போர்மோசாதீவை அடிப்படுத்துமாறு தென்கிழக்குச்சீனாவின் கரையோரப் பகுதிகளில் செஞ்சீன யுத்தத்துக்கான ஆயத்தங்களைச் செய்துவருகிறதெனக் ஹொங்கொங்கிலிருந்து செய்திபரந்திருக்கிறது. செஞ்சீன அரசாங்கம் ஐந்துலட்சம் போர்வீரர்களைக் கொண்ட இராணுவமொன்றைத் தென்கிழக்குச்சீனாவுக்கு அனுப்பிவருகிறதென்றும், அத்துடன் இராணுவதளபாடங்களையும் கொண்டுபோய்க் குவித்து வருகிறதென்றும், சென்ற ஆவணிமுதல் சீனக்கம்யூனிஸ்த அதிகாரிகள் செக்கியாங், புக்கியாங் ஆகிய கடலோர மாகாணங்களிலுள்ள முக்கியநகரங்களிலும், சந்தைப் பட்டினங்களிலும் இராணுவ-பொதுசன பரஸ்பர உதவி நிலையங்களை அமைத்துவருகின்றனரென்றும் சொல்லப்படுகிறது.

* * *

● சோவியற்ருஷியா இன்றுசப்மறின்களை அதிகம் தீவிரவேகத்தில் கட்டிக்கொண்டிருக்கிறதென்றும், இது விஷயமாய் அதனுடன் நின்றுபிடித்துப் போட்டியிடுவதற்கு அமெரிக்க ஐக்கியதேசம் நீங்கலாக மற்றெந்தநாட்டினாலும் முடியாதென்றும் பிரபல கடற்படைநிபுணரான திரு. றேய்மண்ட் பிளாய்க்மன் கூறுகின்றார். ஆயிரம் சப்மறின்களைக் கட்டிமுடிப்பதென அது [illegible] வருடங்களின் முன்னரே [illegible]மிட்டதாம்.

## கத்தோலிக்க சமாச்சாரம்

### தொழிலாளியின் குருபதவி

காலஞ்சென்ற பதினொராம் பத்திநாத பாப்பானவர் பிறந்தவிடமாகிய வட இத்தாலியிலுள்ள டெஸியோபட்டினவாசியும், முன்னர் ஓர்மெக்கானிக்கராக வேலைசெய்துவந்தவருமான வண. பரியா மெடாசுவாமியார் குருப்பட்டம் பெற்றுச் சென்றமாதம் தமதுமுதற் திவ்வியபூசையை நிறைவேற்றியபோது பெருந்தொகையான தொழிலாளர்கள் அதற்குச் சமுகமளித்திருந்தார்கள். இந்தப் புதியகுரவர் முன்னே பியாஞ்சி மோட்டர் சைக்கிள் தொழிற்சாலையில் வேலைசெய்து வரும்போது தேவஅழைத்தலுக்குச் செவிசாய்த்து, ஒருகுருவாகவரத் தீர்மானித்துக் குருமடத்திற் சேர்ந்துகொண்டார்

### யேசுசபையார் நடத்தும் கல்லூரி

எத்தியோப்பியாவின் சக்கிரவர்த்தியான ஹெயிலசெலாசி மன்னர் தமது இளமையில் யேசுசபைக் கலாசாலையொன்றிலேயே அதிகமான கல்வியைக் கற்றுக்கொண்டார். அதிலே அவருக்கு நல்லமனப்பதிவு உண்டாயிற்று. அதனால் அடிஸ் அபாபாநகரில் சமீபத்திலே நவமாகஸ்தாபிக்கப்பட்ட சர்வகலாசாலைக்கல்லூரியை நடத்தும் பொறுப்பை ஒப்பந்தத்தின்கீழ் கனடாதேச யேசுசபைக்குருமாரிடம ஒப்படைத்திருக்கின்றார். அவர்களும் அதனைப் பொறுப்பேற்றுச் சாதாரண உடையுடன் அதனை நடத்திவருகின்றார்கள். இந்தக்கல்லூரி அரசினரால் ஆதரிக்கப்படும் ஸ்தாபனமாகும். எத்தியோப்பிய சக்கரவர்த்தியின் நேர்முகமான பரிபாலனத்திலே அது இருந்துவருகிறது. அதன் கட்டடங்களுக்கும, தளபாடங்களுக்குமாகப் பெருந்தொகைநிதி வழங்கப்படுமாறு அவர் பார்த்துக்கொள்ளுகின்றார்.

### கருதினலின் தேகவியோகம்

இத்தாலியிலே மிலான்நகர் அதிமேற்றிராணியாராய் இருந்துவந்தவரான கருதினல் அல்பிறெடோ ஸ்கூஸ்றர் ஆண்டவர் அந்நகரின் வடபாலுள்ள வெனகோனகுருமடத்திலே தமது 74-ம் வயதில் சென்ற ஆவணி 30-ந் திகதி காலஞ்செல்லலாயினரெனச் செய்திகிடைத்திருக்கிறது. இவரது மரணத்துடன் எழுபதுபேரைப் பூரணமாகக் கொண்டிருந்த கருதினல்மார்சங்கத்தில் இரண்டு ஸ்தானங்கள் காலியாயிருக்கின்றன. ஏறக்குறைய இருவருடங்களின்முன் பரிசுத்தபாப்பரசர் அநேககருதினல்மாரை ஏககாலத்தில் நியமனஞ்செய்து கருதினல்மார் திருச்சங்கம் பூரணமாக எழுபதுபேரைக் கொண்டதாயிருக்கச் செய்துவிட்டார். சென்ற பங்குனிமாதம் ஓர்இத்தாலிய கருதினலான மஸ்சிமி ஆண்டவர் காலஞ்சென்றபோது முதல் ஸ்தானம் காலியாயிற்று. தற்போது கருதினல்மார் திருச்சங்கம் 24 இத்தாலிய கருதினல்மாரையும், இத்தாலியர்அல்லாத 44 கருதினல்மாரையும் அடக்கியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

இப்பொழுது கோவில்களில் ஒரு புதுச்செபம் சொல்லப்படுகிறது அல்லவா? அது என்னத்துக்காக என்று தெரியுமா?

எமது யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே அடுத்த ஐப்பசி மாதம் ஒருசமாகமம் நடக்க விருக்கிறது. இந்த வருடத்தில் தேவமாதாவை விசேஷ விதமாகச் சங்கிக்கிறதற்காக இந்தச் சமாகமம் நடக்கும்.

அத்துடன் ஓர் ஞானோபதேசப் பொருட் காட்சியும் நடக்கும். ஞானோபதேசத்தைச் சரியாய் விளங்கிக் கொள்வதற்கு ஏற்ற உபகரணங்கள் எவையென்று இக்காட்சியில் காணலாம். விசுவாச சத்தியங்கள் ஒவ்வொன்றையும் விளக்கும் படங்கள், பொருட்கள், விளக்கமட்டைகள் யாவற்றையும் காணலாம்.

இவைகள் வெவ்வேறு பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் சித்தஞ்செய்யப் படுகின்றன. இவைகள் எல்லாவற்றையும் நீங்கள் பார்த்ததும் மோட்சமோ என்ற சந்தேகம் முதலாய் உங்களுக்கு வந்தாலும் வரும். சுபம்!

உங்கள் அன்புள்ள அண்ணா

## எங்கே போகின்றாய்?

'ஜெயம்'

1. குழந்தாய்! எங்கே போகின்றாய்?
   கோவிலுக்குப் போகின்றேன்
   முழந்தாள் இட்டே யேசுவிடம்
   மோட்சங் கேட்கப் போகின்றேன்
2. கண்ணே! எங்கே போகின்றாய்?
   கல்விச்சாலை போகின்றேன்
   எண்ணும் எழுத்தும் சற்றிடவே
   இளமையிலேயே போகின்றேன்
3. பிள்ளாய்! எங்கே போகின்றாய்?
   பிச்சை கொடுக்கப் போகின்றேன்
   தள்ளாக் கிழவர் வாசலிலே
   தாங்காப் பசியால வாடுகிறார்
4. புதல்வா! எங்கே போகின்றாய்?
   பூஞ்சோலைக்குப் போகின்றேன்
   மகிழ்வாய் நல்ல மலர்தேடி
   மாதா பாதம் சூடிடுவேன்

## நேசன் கண்ட சிலுவை

"கடவுளும் கத்தரிக்காயும்! கடவுளிருந்தால்... ஏன் நான் சித்தியடையவில்லை? கோவிலுக்குப் போன நேரமெல்லாம் கும்மாளம் போட்டிருந்தால் மனதிற்காவது நிம்மதியாய் இருக்கும்" என்று எண்ணி எண்ணி மனம் புண்ணாயினான் நேசன். கரும்பாய் இருந்த அவன் வாழ்வு இருந்தாற்போல் வேம்பாய் மாறியது. தனது சட்டைச் சாக்கில் இருந்த செபப் புத்தகத்தை அப்பால் சுழற்றி எறிந்தான். செபமாலையைச் சின்னாபின்னமாக அறுத் தெறிந்தான். தனது அறைச் சுவரில் தொங்கியிருந்த படங்களைச் சுக்குநூறாக அடித் துடைத்தான். அந்தோ! அன்று தானே அவன் தனது வாழ்க்கையைப் புதிய முறையில் மாற்றிக் கொண்டான்.

அன்று முதல் அவன் கோவிலுக்காவது, குருமாருக்காவது மரியாதை செய்வதில்லை. தாய் தந்தையரின் புத்தி போதனைக்குச் சற்றுமே செவி சாய்ப்பதில்லை. உற்றார், உறவினரின உபதேசங்களை உதறித் தள்ளினான். மனம் போன வழிவழியே மனோகாமமாகச் செல்லத் தொடங்கினான். விடிந்தால், பொழுது பட்டால் வீணர்களுடன் திரிவதும், குடிப்பதும், கூத்தாடுவதும், உணவு கிடைத்த இடத்தில் உறங்குவதும் தான் அவன் தொழிலாயிற்று.

நேசனின் நண்பர்கள் தங்களால் இயன்ற மட்டும் அவனைத் திருத்த முயன்றனர். ஆனால், அவர்களின் நடவடிக்கை ஒன்றும் பலன் அளிக்கவில்லை. மைந்தனின் மன மாற்றத்தைக் கவனித்த தாய் தந்தையர் மனஸ்தாப முற்றனர். அவன் என்றாவது ஒருநாள் மனந் திரும்புவான் என்று அவர்கள் முடிவு கட்டி, அவனுக்காக அல்லும் பகலும் ஆண்டவனை இரந்து மன்றாடி வந்தனர்.

பல வருடங்கள் ஓடி மறைந்தன. நேசனின் துட்ட நண்பர்களும் அவனை விட்டு விலகினார்கள். உணவுக்கும், உறைவிடத்துக்கும் அவன் இப்போது தனிமையாகவே செல்ல வேண்டியதாயிற்று. அவன் சென்ற சென்ற இடமெல்லாம் பேசா மடந்தை போல் மௌனம் சாதித்த படியே சென்றான். அவ்வாறாக, ஒருநாள் அவன் ஓர் மலையடிவாரப் பக்கமாக நடந்துகொண்டிருந்தான். அப்போது வழியின் ஒருபுறத்தே பாழடைந்த சிறிய அறை ஒன்று காணப்பட்டது. அந்த அறையின் முன்புறத்தே ஓர் சிலுவை தொங்கிக்கொண்டிருந்தது. சூரிய கதிர்கள் சூழ்ந்து அதைப் பிரகாசிக்கச் செய்துகொண்டிருந்தன.

பனியிலும், வெயிலிலும், மழையிலும், குளிரிலும் அடிபட்டுத் தேடுவாரற்றுத் தொங்கிக் கிடந்த அந்தச் சிலுவை அவன் கண்களுக்குத் தென்பட்டது. அதன் தோற்றம் அவன் உள்ளத்தை ஊடுருவவே, மங்கியிருந்த அவன் மனச்சாட்சி பேசத் தொடங்கியது அப்போது "மகனே! இதோ என்னைப் பார்! உன்னை ஈடேற்றவே நான் இந்தச் சிலுவையில் தொங்கினேன்; நீ இதை அறிந்தும் அறியாதவன் போலக் கேவலமாய் நடந்து விட்டாய்; இப்பொழுதாவது உன்னைத் திருத்திக் கொள்" என்று அவன் செவிகளில் ஏதோ உரைப்பது போன்று இருந்தது.

உடனே அம்பு பாய்ந்த மானின் உள்ளம் போல் அவன் நெஞ்சம் கலங்கியது. அவன் கண்களும் கலங்கத் தொடங்கின. முழந்தாட்படியிட்டான். முகங் குப்புற விழுந்தான். கலங்கினான். சலித்தான். கதறினான். கல்லாய் இருந்த அவன் உள்ளம் புல்லாய் மாறியது. வெறுப்புற்றிருந்த சிலுவையில் அவனுக்கு விருப்புத் தோன்றியது.

தனியே கிடந்த சிலுவைக்கு அவனையே துணைவன் ஆக்கினான். தன்னையே அதற்கு அர்ப்பணித்தான். தன் வாழ்க்கையைத் திருத்துவதெனத் திடங்கொண்டான். அந்தச் சிலுவையையும் தன்னுடன் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். ஊதாரிப் பிள்ளைபோன்று தனது பெற்றோரின் இல்லம்போய்ச் சேர்ந்தான். அவர்களிடம் மன்னிப்பு இரந்தான். இன்று அவன் நல்ல ஒழுக்கமாக நடந்துவருகிறான் என்று கேள்விப்பட்டால் நீங்கள் சந்தோஷப் படுவீர்கள் தானே.

— இ. மே. யோசவ் தங்கராசா

## கவலை வேண்டாம்

உங்களுக்கு இனிப்பும், கசப்பும் விருப்பமா? வெளிச்சமும், இருட்டும் விருப்பமா? அதுபோல சருவேசுரனுக்கும், உலகத்துக்கும் பிரியமுள்ளவர்களாய் இருக்கமுடியாது.

உலகத்தைத் தேடி, அதன்பொருள் பண்டங்களிலே கவலை கொள்வதினால் அவையெல்லாம் நமக்கு வாராது மேலும் மேலும் கவலையே மிஞ்சும்.

காட்டில் வளரும் புஷ்பங்களைப் பாருங்கள். அவைகள் காலையில் மலர்ந்து, அன்று மாலையிலேயே வாடி விழுகின்றன. ஆனால், அவைகளின் வர்ணங்கள் என்ன! வனப்பு என்ன! அமைப்பு என்ன! இவையெல்லாம் அம்மலர்கள் தாங்களே தேடினதா?

வானத்தில் பறந்து உலாவும் பட்சிகளைப் பாருங்கள். அவைகள் நூல் நூற்கிறது மில்லை, நெசவு செய்கிறதுமில்லை. ஆனால், அவைகளின் இறக்கைகளின் சோடினைக்கு இணையானது என்ன உண்டு? சலமோன் அரசனும் இணையில்லை.

ஆகையால் "எல்லாவற்றிற்கும் முதலாகச் சருவேசுரனுடைய இராச்சியத்தையும், அதன் நீதியையும் தேடுங்கள்" என்கிறார் யேசு.

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## தெரியுமா?

இந்த அர்ச்சியசிட்டவளின் திருநாள் ஆடிமாதம் 26-ந்திகதி கொண்டாடப்படுகிறது.

1-ம் எழுத்து— அழகில் உண்டு
மிளகில் இல்லை.
2-ம் எழுத்து— அனபில் உண்டு,
அனுதாபத்தில் இல்லை.
3-ம் எழுத்து— அன்னத்தில் உண்டு,
அன்னமயில் இல்லை.
4-ம் எழுத்து— அம்பில் உண்டு,
வில்லில் இல்லை.
5-ம் எழுத்து— பாவில் உண்டு,
காவில் இல்லை
6-ம் எழுத்து— புள்ளில் உண்டு,
புகழில் இல்லை.

[illegible] பிள்ளை
[illegible] ஆனைக்கோட்டை.

## பாழடைந்த கோவில்

13-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே பக்தியானது குளிர்ந்து போகும் தருவாயில் இருந்தது. அணைந்த பக்தியை உலகில் திரும்பவும் மூட்டிவிட வேண்டும் என்று தோமினிக்கும், அவர் சந்நியாசிகளும் முயன்று வந்தார்கள். உலகின் சகல பாகங்களுக்கும் சென்று அவர்கள் பிரசங்கித்து வந்தார்கள்.

அக்காலத்திலே இததாலியில் ஓர் பெரிய தனவான் இருந்தார். அவர் பெயர் பெர்நந்தீன். இவர் மகன் பிரான்சீஸ். இவர்கள் வசித்துவந்த பட்டினம் அசீசி என்பது. ஒருநாள் பிரான்சீஸ் தகப்பனைப் பார்த்து: "அப்பா! உங்கள் தொழில் எப்படி நடக்கிறது?" என்றார். "எனது தொழில் நன்றாய் நடக்கிறது தான்; நீயும் உதவி செய்தால் வியாபாரம் இன்னும் நல்ல நிலைமைக்கு வரக் கூடும்" என்றார் தகப்பனார்.

"நல்லது, நானும் கடைக்கு வருகிறேன்; அங்கு நான் இருந்தால் பல மனிதரையும் சந்திக்க வசதி கிடைக்கும் அல்லவா?" என்று சொல்லி விட்டுக் கடைக்குச் சென்றார் பிரான்சீஸ். வியாபார முயற்சியில் ஈடுபட்டார். அவ்வாறாக, ஒருநாள் அவரது கடையின் வாயிலில் பிச்சைக்காரன் ஒருவன் வந்து தனக்கு ஏதாவது தருமம் கொடுக்கும்படி அவரை இரந்து கேட்டான். பிரான்சீஸ் அவனைநோக்கி: "வெளியேபோ; இங்கேஉனக்குக் கொடுக்க ஒன்றும் இல்லை" என்று துரத்திவிட்டார். அவன் போய்ச் சில நிமிஷங்கள் சென்றதும் பிரான்சீஸின் மனச்சாட்சி வேலை செய்யத் தொடங்கியது. உடனே அவனைத் தேடிச் சென்றார். ஒருசிறு ஒழுங்கையிலே அவனைச் சந்தித்தார். தான் செய்த தகாத செயலுக்காக அவனிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டுத் தனது சட்டைச் சாக்கில் இருந்த பணம் முழுவதையும் கொடுத்து அவனை அனுப்பினார்.

இந்த ஏழையும், நானும் கிறீஸ்துநாதரில் சகோதரர்கள் அல்லவா? இவனைப்போன்ற ஏழைகள் இன்னும் அநேகர் இந்தப் பட்டினத்தில் இருப்பார்கள் அல்லவா? சரி, அவர்களையும் தேடிச் சென்று அவர்களுக்கும் நான் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதை உலைக்கத்தொடங்கியது. கிறீஸ்துநாதருக்காக நான் ஒன்றும் இல்லாத ஏழையாய் இருக்க விரும்புகிறேன் என்றார். அதுமுதல் அவரைப் பின்பற்றத் தொடங்கினார்.

அந்நகரில் பாழடைந்த ஒருகோவில் இருந்தது. அது அர்ச். தமியான் கோவில். அதை ஒருவரும் கவனிப்பதில்லை. பிரான்சீஸ் அங்குதான் போய்த் தனிமையாகச் செபிக்கத் தொடங்கினார். பாடுபட்ட சிலுவை

(அடுத்த பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் இருந்து ஒருதொனி கேட்டது. "பிரான்சீஸ்! இந்தக் கோவிலை எனக்காகத் திருத்தி அமைப்பாயா?"

இதைக் கேட்டதே பிரான்சீஸ் அதிசயத்துடன் "ஆம்" என்று வாக்களித்து விட்டு, அதற்கு வேண்டிய பணத்தை எப்படிக் கண்டுகொள்வது என்று யோசிக்கத் தொடங்கினார்.

தகப்பனின் கடையில் இருந்த சாமான்களை எல்லாம் விற்றுத் தேவையான கல்லும், சீமெந்தும் வாங்கினார். இது தகப்பனுக்குப் பிடிக்கவில்லை. கோபத்துடன் அவரை வீட்டை விட்டுத் துரத்தினார். பிரான்சீஸ்கிறீஸ்துநாதருக்காக ஓர் ஏழைபோல் சீவிக்க ஆரம்பித்தார். அவரது தரித்திர கோலம், அன்பு, பரிசுத்த தனம் ஆகியவற்றைக் கண்ட வாலிபர்கள் சிலர் அவரோடு சேர்ந்து கொண்டார்கள்.

அவ்வாறு சேர்ந்தவர்கள் ஆனைவரும் அர்ச். ஆசீர்வாதப்பர் சபை வளவினுள் ஓர்சிறு குடிசையைக் கட்டி அதில் வசித்தார்கள். தருமம் இரந்தோ, வேலை செய்தோ சீவியத்தைப் போக்கிவந்தார்கள். அப்போது ஆசீர்வாதப்பர்சபைச் சந்நியாசிகள் இவர்களுக்கு ஓர்சிறு கோவிலும் கட்டிக் கொடுத்தார்கள். சில தினங்களின் பின் நூற்றுக் கணக்கான வாலிபர்கள் பிரான்சீஸைப் பின்பற்றினார்கள். அதனால் அவர்களுக்கென ஓர்பெரிய கட்டடம் அமைத்து ஒழுங்குச சட்டமும் செய்ய வேண்டியதாயிற்று.

அசிசி நகரில் இருந்த கிளாரம்மாள் என்னும் ஒரு இளம் பெண் இந்தச் சந்நியாசிகளின் சீவியத்தையும், அவர்களின் கூட்டம் விருத்தி அடைவதையும் கவனித்து வந்தாள். தானும் கிறீஸ்து நாதருக்காக வறியவளாய்ச் சீவிக்க ஆசித்தாள். பிரான்சீஸிடம் வந்தாள். அவர் சொன்ன புத்திமதிப்படி தரித்திர வார்த்தைப்பாடு கொடுத்துப் பெனடிற்சபைக் கன்னியர்கள் மடத்தில் போய்ச் சேர்ந்தாள். சில தினங்கள் சென்றபின் அவளைப் பின்பற்றி வேறு பெண்களும் அதில் சேர்ந்தார்கள். அதனால் அவர்களுக் கென்று வேறாக ஓர் கன்னியர்மடம் அர்ச். தமியான் கோவிலுக்குப் பக்கத்திலே கட்டப்பட்டது. அவர்கள் சபை "வறிய கிளாரம்மாள்" சபை என்று அழைக்கப்பட்டது.

குடும்ப வாழ்க்கையில் சேர்ந்தவர்களுக்கு என்று ஓர் மூன்றும் சபையைப் பிரான்சீஸ் அடியிட்டார். இந்தச் சபையும் இப்போது எல்லா நாடுகளிலும் பரந்து அநேகர் தேவனுக்காகத் தங்கள் சொத்து, சுதந்திரம் யாவும் இழந்து தரித்திரராய், தபசிகளாய்ச் சீவிக்கிறார்கள்.

1224-ம் ஆண்டு பிரான்சீஸ் பரவசமாகி யேசுநாதரின் ஐந்து திருக்காயங்கள் பதியப்பெற்றார். அவர் நெடுநாளாக அவைகளை மறைத்துவைத்திருந்தும் அவருடைய ஞானச்சகோதரர்கள் அவற்றைக் கண்டு பிடித்து விட்டார்கள். இருவருடங்களின் பின் 1226-ம்ஆண்டு ஐப்பசிமாதம் 4-ந்திகதி பிரான்சீஸ் அர்ச்சியசிஷ்டராய் மரணமடைந்தார்.

— எம். ஜெயம்

## முதல்நன்மைப் பாட்டு தமிழாக்கம்

சின்ன யேசுவே நீர்
என்னை நேசிக் கிறீர்
நான் உம்மை நேசிக்கிறேன்

சின்ன யேசுவே நீர்
என் கிட்ட இருக்கிறீர்
நான் இங்கே இருக்கிறேன்

அருமையான யேசுவே நீர்
என்னில் இருக்கிறீர்
நான் உம்மில் இருக்கிறேன்.

சரிவரத் தமிழ் ஆக்கம் செய்து அனுப்பியவர்கள் (1) ரேசலின் சூசைப்பிள்ளை, அகஸ்ரீன்லேன, இளவாலை. (2) எஸ். ஜெயரட்ணம், பத்தாவத்தை. (3) அ. தியோப்பிலஸ், கொட்டாஞ்சேனை.

## கண்டு பிடியுங்கள்

திருச்சபையில் உள்ள சில அர்ச்சியசிட்டர்கள் ஒருவருக்கு ஒருவர் நெருங்கிய இனபந்துக்கள். அவர்களிலே இருபதுபேரின் பெயர்களை சசோடு சோடாக எடுத்துக்காட்டி முறைகளைக் கண்டுபிடித்துச் சொல்லுங்கள் என்று கேட்டதில் பத்துக்கும ஒருவருமே பூரணமான விடை அனுப்பவில்லை. ஆனால், ஒருவர் மாத்திரம் ஒன்று நீங்கலாக ஒன்பதுக்கும் சரியான விடை அனுப்பியிருந்தார்:—

ஜே. ஸ்ரானிஸ்லாவுஸ் குரேரு,
த. க. பாடசாலை,
குடாப்பாடு, நீர்கொழும்பு.

* * *

## விடை கூறுங்கள்

1-ம பகுதி

இதிலே நான்கு எழுத்துகள் கொண்ட தனிச் சொற்களைக்கண்டு பிடித்து, அவற்றின் மூன்றும் எழுத்துகளை எல்லாம் எடுத்துச் சேர்த்தால், முதலில் இருந்து வாசித்தாலும், கடைசியில் இருந்து வாசித்தாலும ஒரேபொருளைத்தரும் நுட்பமான ஓர் சொல்லாகும். அதுயாது?

விடை: விகடகவி

அறிவிலி — வி
அநேகர் — க
கபடர் — ட
விவேகம் — க
பொன்விழா — வி

விடை அனுப்பியவர்கள்:--

(1) தி. அருள்நேசன் பாய்வா, மேற்றிராணியார் மாளிகை, யாழ்ப்பாணம்.

(2) எஸ். டி. சகாயம், மிரிஸ்வத்த.

(3) ரேசலின் சூசைப்பிள்ளை, அகஸ்ரீன்லேன், இளவாலை.

2-ம் பகுதி விடைகள்

1. காற்றடித்த பந்து
2. புறு
3. மனோவேகம்
4. ஒருமுறை
5. பதறாத காரியம் சிதறாது.

விடையனுப்பியவர்:— தி. அருள்நேசன் பாய்வா, மேற்றிராணியார்மாளிகை, யாழ்ப்பாணம்.

நான்கு கேள்விகளுக்கு விடை அனுப்பியவர்கள் — பிறின்ஸ்லி அந்தோனிப்பிள்ளை, முகத்துவாரம். — எஸ் ஜெயரட்ணம், பத்தாவத்தை. — எஸ். டி. சகாயம், மிரிஸ்வத்த.

3-ம் பகுதி விடைகள்

1. பெனடிற்
2. பிரியதத்த பூரணியே வாழ்க

சரியானவிடை அனுப்பியவர்கள் — (1) எஸ். டி. சகாயம், மிரிஸ்வத்த. (2) தி. அருள்நேசன் பாய்வா, மேற்றிராணியார் மாளிகை, யாழ்ப்பாணம். (3) ரேசலின் சூசைப்பிள்ளை, அகஸ்ரீனலேன், இளவாலை. (4) பிறின்ஸ்லி அந்தோனிப்பிள்ளை, முகத்துவாரம். (5) லா. அமலதாசன் வெம்பேட், வங்காலை. (6) தியோப்பிலஸ், கொட்டாஞ்சேனை.

* * *

## நிரைப்படுத்துங்கள்

(1) கெடுவான் கேடு நினைப்பான்.

(2) கடவுளை வணங்கு. — தேசத்தோடு ஒத்துவாழ்.

(3) கல்லாமற் பாதி குலவித்தை.— என் ஆண்டவனே, என்தேவனே. — கடவுளில் நம்பிக்கையாயிரு.

(4) இவரே எனது ஏகசுமாரன்.— நம்முடைய நாயகன்.

(5) கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம். — சத்தியவேத பாதுகாவலன்.

**சரியானவிடைகள் அனுப்பியவர்கள்:**

1. ஞா. [illegible] வதிரி. 2. வ. மரியதாஸ், கரணவாய். 3 வ. அன்னரத்தினம், க. பாடசாலை, வதிரி. 4. பொ. ஜெனேசியஸ், சாவகச்சேரி.

* * *

## கண்டு பிடித்தீர்களா?

(1) தாய் உதரத்திலிருந்து பிறக்காமல் இறந்தவர்கள் யார்? ஆதாம், ஏவாள்.

(2) தாய் உதரத்திலிருந்து பிறந்து இறக்காதவர்கள் யார்? 1. ஏனேக் 2 இதை வாசிக்கும்போது உயிர்வாழுகின்ற மக்கள்சகலருமே

(3) தாய் உதரத்திலிருந்து பிறந்தும் இன்னுமே இறக்காத தீர்க்கதரிசி யார்? எலியாஸ் தீர்க்கதரிசி.

(4) கிணற்றுள் விழுந்தால் ......? முதல் தண்ணீரில் நனைவேன்.

(5) யாழ்ப்பாணத்திலிருந்து ஆடாமல் அசையாமல் கொழும்புக்குச்செல்வன எவை? தெருவீதி, புகையிரத வீதி, தந்திக்கம்பி. இவற்றை உங்கள் விடைகளுடன் ஒப்பிட்டுப்பாருங்கள்.

## பாட்டு இயற்றுங்கள்

### தமிழ் வேண்டும்

கனியும் எனக்கு வேண்டாம்
கரும்பும் எனக்கு வேண்டாம்
இனிய தேனும் வேண்டாம்
இன்பத் தமிழே வேண்டும். (1)

பாலும் எனக்கு வேண்டாம்
பழமும் எனக்கு வேண்டாம்
பாகும் எனக்கு வேண்டாம்
பசுமைத் தமிழே வேண்டும். (2)

பொன்னும் எனக்கு வேண்டாம்
பொருளும் எனக்கு வேண்டாம்
உண்ணும் உணவும் வேண்டாம
உயிராக் தமிழே வேண்டும் (3)

அன்புள்ள சகோதரங்களுக்கு!

'தமிழ் வேண்டும்' என்பதைப் பற்றி நான் பாடி மேலே தந்திருக்கின்ற பாவடிகள் போன்று நீங்களும் சில அடிகள் திறமையாகப் பாடி உங்களுக்குப் பாட்டு இயற்றும் திறமை உண்டா என்று பாலர் பக்கத்தின் மூலம் காட்டுங்கள் ஒருகால் பார்க்கலாம்.

"போன்"

## வழிப்போக்கரில் யேசுநாதர்

அன்று சாயந்தரம் அல்பேட் தனது அறையில் உட்கார்ந்து பத்திரிகை வாசித்துக்கொண்டு இருந்தவன் முழங்கும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டான். மழையும் சோனவாரியாகப் பொழிய, காற்றும் சண்ட மாருதமாக வீசத் தொடங்கியது. சுவாமியார் இந்த வேளை எங்கு அகப்பட்டிருப்பார் என யோசித்தான். அவர்தான் அவனது ஆப்த நண்பரும், வழிகாட்டியுமாக இருந்தார்.

அல்பேட் வியாபார நிமித்தமாகச் சுயநாட்டை விட்டு இத்தாலியில் போய்க் குடியேறினன். அங்கு சென்ற முதல்வருடம் வியாபாரத்தில் அவனுக்குப் பெருமநஷ்டம் ஏற்பட்டது. அடுத்தவருடம் அவன் மனைவியும், ஒரேமகளும் நோய்வாய்ப்பட்டு இறந்தார்கள். அதனால் மன முடைந்த அல்பேட் தனது கடையையும், வீடு வாசலையும் விற்றுவிட்டுத் திரும்பவும் தனது சுயநாட்டுக்குப் போக எண்ணினன். ஆனால், அவன் எண்ணியபடி செய்யாது போல் சுவாமியார் அவனுக்குப் புத்தி புகட்டினர்.

"தம்பி! உன்வீடு ஒருமலைமேல் கட்டப்பட்டிருக்கிறது. அங்கு நாளாந்தம் எத்தனையோபிரயாணிகள் குதிரையிலும், கால்நடையிலும் ஏறிஇறங்க வருவார்கள். அவர்களில் சிலர் தாகமாய் இருப்பார்கள். சிலர் பசியினல் வாடியிருப்பார்கள். சிலர் நோயால், பிணியால் வருந்தவேண்டி நேரிடும். நீர் அங்கே இருந்தால் அவர்களுக்கு உம்மால் இயன்ற உதவிகளைச் செய்யலாமே

"என் நாமத்தின் நிமித்தம்
இச்சிறுவர்களில் ஒருவனை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை
ஏற்றுக் கொள்ளுகிறான்"

என்று எங்கள் ஆண்டவர் திருவளம் பற்றினர் அல்லவா? ஆதலால் நீர் அங்குதானே இருந்து வழிப்போக்கரை வரவேற்று யேசுநாதரைச் சந்தோஷப்படுத்தும்" என்றுகூறினர். அப்படியே அவனும தினமும் தன்னைநாடி வரும பிரயாணிகளுக்கு உதவிசெய்து வந்தான். நாளாந்தம நடப்பதைத் தனது தினசரிக் குறிப்புப் புத்தகத்திலும் குறித்து வைத்தான.

வழக்கம்போல ஒருநாள் இரவு அவனுடைய அறையின்கதவு திடீரெனத் திறபட, அங்கே ஒருபிரயாணி களைப்புடன் வந்திருக்கக் காணப்பட்டான். "ஐயா! இரவு தங்கிப்போக ஒரு இடம் தருவீரா? குதிரையும் மழையில் நனைந்துபோய் இருக்கிறது" என்றான. அல்பேட் தாமதியாது அவனுக்கும், குதிரைக்கும ஆகவேண்டிய சமயட்சணைகள்செய்து, அவனுக்குப் படுக்கையும கொடுத்தான். பின்னர் அதிகாலை பிரயாணி புறப்பட்டான். அல்பேட் காலைஉணவும் கட்டிக் கொடுத்து அவனை வழியனுப்பி வைத்தான். அப்போது அவனுடைய முகக்குறிகளில் ஒருவித அங்கலாய்ப்பும், பயங்கரமும் காணப்பட்டன. அவன் போனபின் அலபேட் அவனைப்பற்றி ஆலோசிக்கத் தொடங்கினன். நடந்ததைக் குறித்துக் கொண்டு இருக்கும்போது நகரஅதிகாரி அப்பிரயாணியைத் தேடிக்கொண்டு வந்து, அல்பேட்டிடம் அவனைப்பற்றி விசாரித்தான். அல்பேட் அவனது குறிகளையும், அவன் புறப்பட்டுச் சென்றபாதையையும அவருக்குத் தெரிவித்தான், அதிலிருந்து அவன் ஓர்குற்றவாளி என்பதையும, அவன் அவசரமாகப் புறப்பட்ட காரணத்தையும் அல்பேட் மட்டிட்டு அறிந்து கொண்டான். உடனே அதிகாரி அவன் சென்ற வழியே குதிரையைத் தட்டிக் கொடுத்துப் புறப்பட்டார்

அல்பேட்டுக்கு மன அமைதி குழப்பம் அடையத் தொடங்கியது. பாதகன் ஒருவனுக்கு எனதுவீட்டில்தங்கஇடம் கொடுததேனே; ஆனல், நான் குற்றம் செய்திருக்கக் கூடுமென நினைத்தான். சுவாமியாரின் வரவை எதிர்பார்த்தான். பதினைந்து நிமிஷங்களின்பின் அவரும் வந்துசேர்ந்தார். "சுவாமி! நான் ஓர் துரோகமானசெயலைச் செய்துவிட்டேன்; ஒருதுரோகியை இன்று என் வீட்டில் தங்கஇடங்கொடுத்து ஆதரித்தேன். அவனைக் கிறீஸ்துநாதரின் போரல் நான் ஏற்றுக்கொண்டது குற்றமாகுமா?

"மகனே! நீ செய்தது பெரிய பிறர்சிநேகக் கிரிகை; அவன் குற்றவாளி என்று உனக்குத் தெரியாது; நீ செய்ததை நல்ல கருத்தோடு கிறீஸ்துநாதரின்போரல் செய்திருக்கிறாய்; அவனும்யேசுவின் சகோதரன்தான்; ஒருகாலம் அவன் அவருடைய வரப்பிரசாதத்தினல் மனந்திரும்பி ஒரு அர்ச்சியசிட்டன் ஆகலாம்.

"நான் சொல்வதை நம்பு மகனே! இவ்வுலகில் கிறீஸ்துநாதரை அவரது வறியவர்களில் காணும் பாக்கியம் பெற்றவர்கள் மோட்சத்தில் அவரது அர்ச்சியசிட்டவர்களின் மகிமையிலும் அவரைக் காண்பார்கள்; ஆதலால் நீ செய்தது பெரிய புண்ணியக் கிரிகை; இங்கு எந்த மனிதரையும் வரவேற்கும்போது யேசுநாதரையே உன் விருந்தாளியாக வரவேற்கிறாய் என்பதை மறந்துபோகாதே; இந்த நற்கிரிகையைத் தொடர்ந்துசெய்துவா" என்று அவனைத் தேற்றினர் போல் சுவாமியார்.

நீங்களும் உங்கள் அயலாரில் யேசுவைக் காண்கிறீர்களா? அவரில் அவர்களை நேசித்து வருகிறீர்களா?

M. J. M.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழைப்பழம்

பழவகைகளுள் மிகச்சிறந்த வாழைப்பழம், இதரபழங்கள் எல்லாவற்றையும்விடக் குறைந்த விலையில் கிடைக்கக்கூடியது. உடலுக்கு நலனை விளைக்கக்கூடியதும், ஏழைகள்முதல் பணக்காரர்வரை தாராளமாக உபயோகிக்கக்கூடியதும், மிகவும் புனிதமானதும் வாழைப்பழமதான். இது உணவிற்குரிய பூரணசத்துகளை பொருந்தியது. ஒரு வாழைப்பழம் 20 திராட்சைப் பழங்களுக்கும், 5 பேரீச்சம்பழங்களுக்கும், 2 அத்திப்பழங்களுக்கும், இரண்டுசிறிய அப்பிள்களுக்கும், ஒரு கோப்பை தோடம்பழஇரசத்துக்கும் சமமானது. வாழைப்பழம் தடித்த தோலினால் மூடப்பெற்றதாயிருப்பதால் சுத்தமானதாக விளங்குகின்றது.

பழுக்காத வாழைக்காயிலே முக்காற்பங்கு சலமும், ஐந்தில்ஒருபங்கு மாச்சத்தும் இருக்கின்றன. பழுத்துவிட்டால இந்தமாச்சத்தானது சுலபத்திலே சீரணிக்கக்கூடிய பழசர்க்கரையாகமாறிப் பூரணசக்தி உண்டாக்கக் கூடியதாகிவிடுகிறது.

ஒருவாழைப்பழத்தில் உஷ்ணமூட்டககூடிய சத்து நூறுபங்கிருக்கிறது. அதாவது ஒரு றாத்தல்பழத்தில் 460 பங்கு உஷ்ணச்சத்திருக்கிறது.

வாழைப்பழத்தில் மாச்சத்து, கொழுப்பு, புரோட்டீன (வெணகருசத்து) பெக்டீனமுதலிய சத்துக்களுடன் மிகநுண்ணிய அளவிலே சுண்ணம், செம்பு, இரும்பு, கந்தகம், லவணதாதுமுதலியவற்றின் சத்துக்களும், ஏ, பி, சி, டி, இ ஆகிய ஐவகைச் சீவசத்துக்களும் அடங்கியிருக்கின்றன. அப்பிள்அல்லது தோடம்பழத்தில இருப்பதைவிட அதிகமான அளவுகளில் கல்சியம், பொஸ்பறஸ், பொட்டாஷ், அயம் ஆகியசத்துக்கள் வாழைப் பழத்தில் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதில்ஏ சீவசத்து அதிகமாக இருப்பதால் கண்பார்வை அதிகரிக்கிறது. சொறி,சிரங்கு, கரப்பன்கள்வாராமல் தடுக்கும்சக்தியும் இதில் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உடற்பருமனைக் குறைக்கவும்சரி, கூட்டவும்சரி இந்தஒரேஅற்புதபழமாகிய வாழைப்பழம் உபயோகிக்கப்படுகின்றது. அமெரிக்காவின் பிரபல டக்றராகிய ஹராப்அவர்கள்செய்த ஆராய்ச்சியின்பலனாக, உடல்பருத்த ஒருஆளுக்கு எட்டுவாழைப்பழங்களையும், நாலுகிளாஸ் பாலையும்சேர்த்துத் தினமும்கொடுத்துக்கொண்டு வந்ததில் பத்துத்தினங்களுள் ஒன்பதுறாத்தல் சதை குறைந்துவிட்டது. என்ன, ஆச்சரியமாக இருக்கிறதா? ஒருநாளில் இருவேளை வாழைப்பழமும், பாலுணவுமாக வைத்துக்கொண்டு ஒருவேளைக்குமட்டும் காய்கறிகள், இறைச்சி, இதரபழங்கள், சாதமமுதலியவைகளை உடற்பருமனுயிருப்பவர்கள் சாப்பிடலாம்என்று டக்றர்ஹராப் கூறுகிறார்.

பருமன்குறைவாய் மெலிந்திருப்பவர்கள் சாதாரணஉணவுடன் வாழைப் பழங்களைப் பாலுடன்சேர்த்துச் சாப்பிட்டால்உடல்பருக்கும. ஏனையஉணவுகளைவிட வாழைப்பழந்தான் மிகச்சீக்கிரமாகச் சீரணித்துவிடும். அதிலுள்ள சர்க்கரைப்பொருளே அதற்குதவியாக இருக்கிறது.

உட்கார்ந்து வேலைசெய்யும் தொழிலாளிக்குப் பாலும், வாழைப்பழமுந்தான் சகலசத்துக்களும் சரியாயமைந்த "சமன்செய்த உணவு" என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு ஆகியஇரண்டுக்குமே வாழைப்பழம் நல்லமருந்தாகும்.

ஆபிரிக்குள்ளர்கள் — நான்குஅடி உயரமேஉள்ள ஒருசமூகத்தினர் நல்ல வலிமை உடையவர்களாக இருப்பதேன்? ஒருமுறை உட்கார்ந்தால் அறுபது வாழைப்பழங்களுக்குமேல் தின்றுவிடுவார்கள். அதனால் அவர்களுடையபும நல்லவலிமை உடையதாயிருக்கின்றது.

வாழைப்பழங்களை உலர்த்தி மாவாக்கிவிடலாம. இது உருசியிலும நன்றாக இருக்கிறது. மலபந்தம, சீதபேதி, வயிற்றுவலி, விஷசுரம், கீல்வாதமபோன்ற பலநோய்களால் பீடிக்கப்பட்டிருப்பவர்களுக்கு இது நல்ல ஆகாரமாக இருக்கிறது.

வாழைப்பழத்தைத் தோல்நீக்கி மெல்லியபில்லைகளாகநறுக்கி வெயிலில் உலர்த்திக் காய்ந்தபின்னர் அவைகளை நன்றாகப்பதபசெய்து காற்றுப்புகாத டப்பிகளிலே போட்டுவைத்து உபயோகிக்கலாம். அது உணபதற்குச் "சொக்கிளேற்று" மாதிரி இருக்கும். உருசியாகவும் இருக்கும். ஆரோக்கியத்தையும் தருகிறது.

(தொடரும்)

## பிரிவுஉபசார வைபவம்

கடந்தஇருபதுஆண்டுகளாக நாரந்தனைக் க. ஆண பாடசாலையில ஆசிரியத் தொண்டாற்றிய திரு. எஸ். ஆசீர்வாதம்அவர்கள் கிளிநொச்சிக் க. பாடசாலைக்கும, கடந்த மூன்றுஆண்டுகளாகத் தொண்டாற்றிய திரு. ஜே. சவிரிமுத்து அவர்கள் ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் தமிழ்ப்பாடசாலைக்கும மாற்றப்பட்டமையையிட்டு அவர்களுக்குச் சென்ற 5–9–54-இல் கட்டைக்குராவர் வண. ஜோண மேரி சுவாமியவர்களின் தலைமையில் ஓர் பிரியாவிடை விருந்துஉபசாரணை நடந்தேறியது. அவ்வமயம் டக்றர் ஜேமஸ் நீக்கலஸ், தலைமைஆசிரியர் திரு. ஏ. மனுவேற்பிள்ளை, வட்டார சுகாதார பரிசோதகர் திரு. எஸ். குமாரசாமி, ஆசிரியர்கள் வி. உவில்லியம், ரி.ஏ.எவ். இராசையா, வண. கட்டைக்குராவர் ஆகியோர் பிரியாவிடைநாயகர்களின் சிறந்த ஆசிரியசேவைகளைப் பாராட்டி அன்னார்க்குப் புகழ்மாலைகள்சூட்டினார்கள். அதன்மேல் இருவரும் நன்றி தெரிவித்தபின் பிரதிமைப்படம் பிடிக்கப்பட்டு உபசாரணை முடிவாயிற்று.

— நிருபர்

## விடுமுறைக் கழகம்

நீர்கொழும்புப்பிரிவுத் தமிழாசிரியர்களின் விடுமுறைக் கழகம் சென்ற 31-8-54 தொடக்கம் 4-9.54 வரை நீர்கொழும்புப்பிரிவுத் தமிழாசிரியர் சங்கத்தின்உதவியுடன் சென் மேரீஸ் தமிழ்ப்பெண்பாடசாலை மண்டபத்தில் நடைபெறலாயிற்று. இக்கழகம் வட்டார வித்தியாதரிசி திரு. ஆர். சிவபாதம்அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஏறக்குறைய 200 ஆசிரியர்கள் பங்குபற்றினர். இதில் பாலரைப்பயிற்றும்முறையே முக்கியமாக ஆராயப்பட்டது. பெரும்பாக வித்தியாதரிசி திரு. டி.எம ஹெற்றியாராச்சி, கொழும்புப்பகுதி வித்தியாதரிசினி திருமதி நவரத்தினம், திரு. என். அருட்பிரகாசம், நீர்கொழும்பு அரிச்சந்திரா வித்தியாலயஆசிரியர் திரு. கனகநாயகம ஆகியோர் பாலர் கழக முறையைப்பற்றிச் சிறந்தசொற்பொழிவுகள் நிகழ்த்தினர். ஈற்றில் தோட்ட விருந்துபசாரணையுடன் கழகம் நிறைவாயிற்று.

## தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினிமாதா திருநாள்

மகாபெலக்கமண்டலர்குல மக்களால் இம்மாதம் 10-ம் திகதியும், 11-ம் திகதியும் அர்ச். அந்திரே அப்போஸ்தலர் நாடகம் படிதது 12-ந்திகதி பாட்டுப்பூசை சுற்றுப்பிரகாரத்துடன் திருநாள் முடிவாகும்.

கட்டைக்குராவர்

## AUCTION SALE

By virtue of the Commission issued to me in partition case No. 10589 D C. Jaffna, I shall sell by Public Auction in terms of Partition Act No 16 of 1951 on Saturday, 16th October, 1954 at 4 p.m at the spot the undermentioned property:

All that house and premises situated at Third Cross Street, Jaffna Town in the Parish of Chundicully in the Division and District of Jaffna, Northern Province in extent Two (2) Lms. V.C. and Eleven and Eleven over Sixteen Kulies ($11\frac{11}{16}$) kls. with its appurtenances and bounded on the East and North by the property of the heirs of Mary Josephine of W. B. Kanagaratna on the West by Third Cross Street and on the South by Bankshall Street.

**S. Ratnasabapathy,**
Commissioner of Sales & Valuator.

42, Colombogam Road,
Jaffna, 1-9 54.

## நாலு சங்கதிகள்

● பிரித்தானியஅரசு தனது கடற்படையைப் பலப்படுத்துவதில் தீவிரமாக வேலைசெய்துகொண்டே வருகிறது. இன்னும் இரண்டுஅல்லது மூன்று வருடத்தில் அதன்கடற்படையானது 5பாரிய யுத்தக்கப்பல்களையும், 19 விமானந்தாங்கிக் கப்பல்களையும், 29 குரூயிசர்களையும், 100 டிஸ்திரோயர்களையும், மற்றும்அநேக சிறிய கடற்படைக்கப்பல்களையும் கொண்டதாயிருக்கும்.

● உலகில்இன்று மிகப்பாரிய கடற்படையைக் கொண்டிருப்பது அமெரிக்க ஐக்கியதேசமேயாகும். தற்போது அதனிடம் எல்லாகப் 15பாரிய யுத்தக் கப்பல்களும், 112 விமானந்தாங்கிக் கப்பல்களும், 75குரூயிசர்களும், 600 டிஸ்திரோயர்களும், 20 சப்மறின்களும், மற்றும்அநேகசிறிய கடற்படைக் கப்பல்களும் இருந்துவருகின்றன.

— எகிப்திலே 19 ஆடவர்களும், 2 பெண்களுமான 21 கம்யூனிஸ்தர்கள் எகிப்தியஅரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதிசெய்து அகப்பட்டு அங்கு சுப்பிறீங்கோட்டிலே சென்றவியாழக்கிழமை ஆயுள்தண்டனைமுதல் பல்வேறு பட்டகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தச் "செஞ்சதி" காரரில் டக்றர்மார், வழக்கறிஞர்கள், மாணவர்கள் ஆதியாம்பலரும் அடங்கியுள்ளார்கள்.

— கருதினல் செறேஜீரே ஆண்டவரது தலைமையிலே போர்த்துக்காலிலிருந்துபோன ஆயிரம்யாத்திரிகர்கள் உட்படச் சமீபத்திலே லூர்துதிருப்பதியில் ஐம்பதினாயிரம் யாத்திரிகர்களுக்குமேல் ஒன்றுகூடியிருந்தார்கள் பிரான்சிய தேசியதிருயாத்திரை அப்போது நடந்தேறியது. லூர்துபதியில் தங்கப் போதிய இடமில்லாமையால் அநேகர் அப்பதிக்குவெளியே கூடாரங்களில் தங்கியிருந்தார்கள்.

— இந்தமரியாயின் புனிதவருடத்தின் முதல் ஆறு மாதங்களிலும் 31,04,839 பிறதேசதரிசகர்கள் இத்தாலியின் எல்லைகளைக்கடந்து அத்தேசத்துக்கு வந்திருக்கிறார்களென இத்தாலிய பிரயாணகாமசாலை அறிக்கையிட்டிருக்கிறது. இத்தொகை முந்தியவருடத்தின் முதல் ஆறுமாதங்களிலும் வந்துபோன தரிசகர்கள் தொகையிலும் 5,12,438 பேரால் கூடியதாகும்.

## சகாயமாதா மகோற்சவம்

பெரியவிழான், அர்ச். ஸ்நாபக யுவானியார் கோவிலில் ஸ்தாபிக்கப்பட்ட சதாசகாயமாதாவின் 50-வது வார நவதின உற்சவம் திருமணித்தியாலஆராதனையுடன் கடந்த 26-8-54-இல் மிகவும் பக்தியருட்சிக்குரிய விதமாகக் கொண்டாடப் படலாயிற்று. அன்று சகாயமாதாபீடம் நவதினஉற்சவநாளை நினைவூட்ட 50மெழுகுவர்த்திகளால் தீபாலங்காரம் செய்யப்பட்டு, நறுமலர்களாலும், பசுந்தளிர்களாலும அழகுறச் சிங்காரிக்கப்பட்டிருந்த தோற்றம் கண்ணையும், கருத்தையும் ஒருங்கேகவரலாயிற்று. சிறுவர்களின் தேனினுமினிய தீங்குரலும, பண்ணமைந்த பாடல்களும் உற்சவத்தை இனிதேசிறப்பிப்பனவாயின. இந்நாளை நினைவூட்டும் ஞாபகப்படங்கள் எல்லாருக்குமகொடுக்கப்பட்டன ஆராதனை வேளையில் கட்டைக்குராவர் அதிவண. எச். ஜெலான்ட் சுவாமியவர்கள்செய்த சிறுபிரசங்கத்தில், நிரந்தரமாக அங்கு குருவானவரொருவர் இல்லாதபோதிலும் செபக்கூட்டங்களைப் பத்தியுடன் சித்திக்குரியதாக நடாத்தும் இப்பங்குக்கிறீஸ்தவர்களைப் பாராட்டி, அவர்களுடைய ஒற்றுமையைக் குறிப்பிட்டுச் சில எடுத்துக்காட்டுகளையும குறிப்பிட்டார். பக்தர்கள் தாங்கள் அடைந்து கொண்ட எண்ணற்கரிய நலன்களுக்காகச் சதாசகாயமாதாவை மனம் மொழிமெய்களால் வாழ்த்தினர். சற்பிரசாதஆசீர்வாதத்துடன் உற்சவவிழா பூர்த்தியடைந்தது.

— நிருபர்

## ருஷியாவின் கடற்பலம்

உலகின் ஏனைய சகல அரசுகளுடனுமே போட்டியிடுதற்கென்று அத்துணை பலம்பொருந்திய பிரமாண்டமான கடற்படைஒன்றைச் சோவியற் ருஷியா அமைத்துவருவதாகப் பிரித்தானியகடற்படை தெரிவிக்கின்றது. சென்றஇரண்டாவது உலகயுத்தம் முடிந்ததுமுதல் இதுவரையிலே போர்க்கப்பல்களைக் கட்டுவதற்கென்று குறைந்தபட்சம் அது 1,200 கோடிபவுண் செலவிட்டிருக்கின்றதாம். இன்னும் இரண்டு அல்லது மூன்றுவருடத்தில் சோவியற்ருஷியா நவீனமாதிரியான 30 தீவிரகுரூயிசர்களும், 500 சப்மறின்களும், 150 டிஸ்திரோயர்களும் உட்பட 2,500 கப்பல்களைக் கொண்டிருக்குமென மதிப்பிடப்படுகிறது. ருஷியா திரும்பவும் கடற்பலமுடையதாக வந்துவிட்டதென்றும், எந்தக் கடற்படையினதும் தாக்குதலைச் சமாளித்துத் தனது 28,000மைல்நீளமான கடற்கரைஎல்லைகளை அதுபாதுகாக்க முடியுமென்றும் ருஷியமக்கள் நம்புகின்றார்கள்.

## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

எனதுமகளின்பிரசவம் யாதொரு விக்கினமும் இன்றி நடக்க வேண்டுமெனச் சதா சகாய மாதாவை இரந்து மன்றாடி நேர்ந்துகொண்டேன். அவவின் அருளால் எனது மகள் ஒருவித விக்கினமும் இல்லாது குழந்தையைப் பெற்றெடுத்துத் தாயும், குழந்தையும் சேமமே இருக்கிறார்கள். சதாசகாயமாதாவுக்கு நன்றித்துதி கூறுவதுடன் நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

மிசெஸ் ஜே. எல். பெர்னண்டோ
மன்னார்

* * *

யேசுவின் திருஇருதய இரக்கத்தினாலும், அர்ச். எக்ஸ்பெதித்துஸ் என்பவரின் மன்றாட்டினாலும் எனதுமகன் கேட்ட உத்தியோகம் கிடைத்ததற்கு நன்றியாக இதைப் பிரசித்தப்படுத்துகிறேன்.

மா. அந்தோனிப்பிள்ளை,
யாழ்ப்பாணம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 9-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org